பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 03 | 08 செப்ரெம்பர் 2018 | விதி : 117



அடுத்தது



பின்பற்றக்கூடாத
முன்னுதாரணம்



நிலத்துக்காகத்
தொடரும் போராட்டம்



நகைப்புக்கு
இடமளிக்கும் நாட்டின்
முதல் சீமாட்டி




## இன ஒடுக்குமுறைக்கு களம் அமைக்கும் தமிழ் அரசியல்வாதிகள்

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



12 ஆண்டுகளின் பின் மாதவனுடன் ஜோடி சேர்கிறார் அனுஷ்கா. ஹேமந்த் மதுகர் இயக்கும் இந்தப் படம் தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழிகளில் தயாராகிறது.





'விஸ்வாசம்' படத்தில் அஜித் இரு வேடங்களில் நடிப்பது ஏற்கனவே அறிந்ததுதான்.

விஸ்வா, சாம் என்ற பெயர்களில் நடிப்பதாலேயே படத்திற்கு 'விஸ்வாசம்' எனப் பெயரிட்டுள்ளார்களாம்.



நயன்தாராவின் 'கோலமாவு கோகிலா' படத்தின் வசூல் 20 கோடி இந்திய ரூபாவை தாண்டி விட்டது.

நாயகியை மையமாக வைத்து எடுத்த படத்தில் இந்தப் படமே இவ்வளவு அதிகமாக வசூலித்துள்ளது. எனவே இந்தப் படத்தை ஹிந்தியில் இயக்கப் பேச்சு நடக்கிறது.



அதியமான் உதயநிதியை இயக்கவுள்ள படத்தில் கயல் ஆனந்தி பேய் வேடத்தில் நடிக்கவுள்ளார்.

இந்தப் படத்தில் உதயநிதிக்கான நாயகிக்கு பொருத்தமானவரை தேடி வருகிறது படக்குழு.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் 'சர்கார்' படத்தின் அனைத்துப் படப்பிடிப்புகளும் நிறைவடைந்து விட்டது.

படத்தில் விஜயின் நண்பியாகவும், முதலமைச்சரின் மகளாகவும் வரலட்சுமி நடித்துள்ளார். கதை அரசியலை மையப்படுத்தியது.



கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் படத்தில் நடிக்கிறார் த்ரிஷா.

இந்தப் படத்துக்காக தனது தலையலங்காரத்தில் மாற்றம் செய்துளார். அந்தப் படத்தை வலைதளத்தில் போட்டவர் "ஒரு பெண் தனது தலையலங்காரத்தை மாற்றுகிறாள் என்றால் வாழ்வில் பெரும் மாற்றத்தை சந்திக்கிறாள் என்று அர்த்தம்" எனப் பதிவிட்டுள்ளார்.



ஜான்சி ராணி வரலாற்றுப் படம் 'மணிகர்ணிகா' என்ற பெயரில் படமாகிறது. இந்தப் படத்தை இயக்கிய கிரிஷ் வேறு ஒரு படத்தை இயக்குகிறார்.

ஆனால், சில காட்சிகள் திருப்தி அளிக்காததால் நாயகி கங்கனா ரணாவத் தானே அந்தக் காட்சிகளை மீள இயக்குகிறார். இந்நிலையில் வில்லன் நடிகர் சோனு படம் ஏற்கனவே நிறைவடைந்து விட்டது என நடிக்க மறுத்துவிட்டார்.

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 08 செப்ரெம்பர் 2018 | விதி : 117


# வடக்கில் தங்கம் தேடும் தென்பகுதி கொள்ளையர்கள்

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் விடுதலைப் புலிகளால் தங்கம் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறி அகழ்வில் ஈடுபட்ட ஏழுபேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஆறுபேர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் அகழ்வில் தங்கம் கிடைக்கிறதோ இல்லையோ நிச்சயமாக பல தளபதிகள் உட்பட ஏராளமான போராளிகளின் எலும்புகள் கிடைக்கும். ஏனெனில் போரின் இறுதிக்கட்டத்தில் படையினர் மேற்கொண்ட பெரும் சுற்றிவளைப்பில் கடும் சமர் இடம்பெற்று இங்கு ஏராளமான போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

ஒரு பெரும் வீரவரலாறு எழுதப்பட்ட அந்த மண்ணில் தங்கம் தேடிச் சட்டவிரோத அகழ்வு நடத்துமளவுக்கு பணத்தாசை பிடித்த வக்கிர மனம் சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ளதைப் புரிந்து கொள்ள முடிகிறது. விரலை வெட்டி மோதிரம் திருடும் கொள்ளையர்களுக்கும் அவர்களுக்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

அதேவேளையில் போர் முடிவடைந்த போது தமிழ் மக்களால் தமிழீழ வைப்பகத்தில் அடகு வைக்கப்பட்ட நகைகள் படையினரால் கைப்பற்றப்பட்டன. அதில் ஒரு பகுதி மஹிந்தவால் மக்களுக்கு வழங்கப்பட்டது. மிகுதித் தங்கம் எவரால் விழுங்கப்பட்டது என்பது இதுவரை தெரியவில்லை.



இதேபோல் ஆனந்தபுரத்தில் தென்னிலங்கைவாசிகள் தங்கம் தேடுவதில் என்ன ஆச்சரியம் இருக்கமுடியும்.

**அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி**

# விசேட நீதிமன்றத்துக்கு பலத்த பாதுகாப்பு

கடந்த புதன்கிழமை எதிர்க் கட்சிகளின் கூட்டமைப்பினர் மக்கள் சக்தி என்ற பெயரில் கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பட்டப் பேரணியின் போது கொழும்பு புதுக்கடையில் அமைந்துள்ள புதிதாக அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்துக்குக் கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.


ஜனாதிபத மாளிகை, அலரிமாளிகை என்பவற்றுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு முக்கியத்துவம் விசேட நீதிமன்றம் அமைந்துள்ள கட்டடத் தொகுதிக்கும் வழங்கப்பட்டது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடி நடவடிக்கைகளின் விசாரணைகளைத் துரிதப்படுத்தவே மேற்படி விசேட நீதிமன்றம் அமைக்கக்கப்பட்டது.

எதிர்க்கட்சி கூட்டணியில் உள்ள ராஜபக்ஷ சகோதரர்கள் உட்படட பல தலைவர்கள் இந்த நீதிமன்றத்தால் தண்டிக்கப்படும் வாய்ப்புகள் இருப்பதாகக் கருதப்படுகிறது. எனவே எதிர்க்கட்சிக் கூட்டணியின் ஆர்ப்பாட்டத்தைப் பயன்படுத்தி நீதிமன்றம் தாக்கப்படக்கூடும் என்ற அச்சம் காரணமாகவே அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக நம்பப்படுகிறது.

நீதிமன்றம் தாக்கப்பட்டு சில ஆவணங்கள் அழிக்கப்பட்டால் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அது சாதகமாக அமைந்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையாரைப் புத்தராக்கும் முயற்சி தொல்பொருள் திணைக்களத்தின் சதி



முல்லைத்தீவு மாவட்டத்தி லுள்ள செம்மலைக் கிராமத்தில் மக்கள் பரம்பரையாக வழிபட்டு வந்த பிள்ளையார் ஆலய வளாகத்தில் கௌத்த மத தொல்பொருள் சின்னங்கள் காணப்படுவதாகத் தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. மேலும் அங்கு பௌத்த ஆலயம் அமைந்திருந்த

தாகவும் அது அழிக்கப்பட்டே அங்கு பிள்ளையார் கோயில் கட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வறிவித்தலை அடுத்து அங்கு ஒரு புத்த பிக்கு வந்து குடியேறியிருப்பதாகவும் அங்கு ஒரு விகாரையை அமைப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது. இம்முயற்சிக்கு நாயாறுப் பகுதியில் பருவகால மீன்பிடிக்கு வந்து தங்கிச் செல்லும் சிங்கள மீனவர்களும் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமம் கரைத்துறைப்பற்று வன்னிமை சேர்ந்தது என்பதுடன் அங்கு தமிழ் மீனவர்களே காலம் காலமாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் அவர்கள் பிள்ளையாரை வழிபட்டு வருகின்றனர் என்பதும் முக்கிய விடயங்களாகும். ஒரு சிங்களவர் கூட குடியிருக்காத அக்கிராமத்தில் தொல்பொருள் சின்னங்கள் காணப்படுவதாகக் கூறி விகாரை அமைப்பது தமிழ் மக்களின் பிரதேசங்களைச் சிங்களமயப்படுத்தும் நயவஞ்சகச் சதியின் ஒரு பகுதியாகவே பார்க்கப்படுகிறது.

அவ்வாறு போர் ஆரம்பிப்பதற்கு முன்கு தண்ணிமுறிப்புக்கு அருகில் உள்ள குருந்த மலையில் புத்தபிக்கு ஒருவர் வந்த விகாரை அமைத்ததும் பின் அவர் விரட்டப்பட்டதும் இடம்பெற்றதை மறந்துவிடமுடியாது.

அதேபோன்று நெடுங்கேணி ஒலுமடுவில் வெடுக்கு நாறி மலையில் அமைந்துள்ள லிங்கேஸ்வரர் ஆலயம் தொல்பொருள் திணைக்களத்துக்கு உரியதெனக் கூறி அங்கு மக்கள் வழிபடச் செல்வது தடுக்கப்பட்டது. அங்கு கிராமிய வழிபாட்டு முறைக்கமைய ஒவ்வொரு வெள்ளியும் விளக்கு வைத்து வழிபடுவதும் வருடா வருடம் பொங்கல் நடத்துவதும் இடம்பெற்று வருகிறது.

தற்சமயம் நீதிமன்றம் அப்பகுதிக்கு மக்கள் செல்லக் கூடாதெனவும், 400 மீற்றருக்கு அப்பால் நின்றே வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவித்துள்ளது.

எல்லைப்புற கிராம மக்களை சிங்கள - பௌத்த மயப்படுத்தும் நடவடிக்கையில் தொல்பொருள் திணைக்களம், புத்தர்பெருமானைப் பயன்படுத்தி வருவது தமிழ் மக்கள் மத்தியில் கோபாவேசத்தை ஏற்படுத்தியுள்ளது.

புதிய அரசமைப்பில் பௌத்தத்துக்கு முதலிடம் என்பதை ஏற்றுக்கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இதுவரை இவ்விடயம் தொடர்பாக கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. இதுவும் நல்லாட்சி அரசின் நல்லிணக்க நடவடிக்கைகளில் ஒன்று என சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

**மெல்லெனப் பாயும் நீர் கல்லையும் அரித்துப் பாயும்**

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்







பெண் பிள்ளைகளை பெற்ற எல்லா அப்பாக்களுமே அதிர்ஷ்டசாலிகள்தான்... ஏனென்றால் அவர்களுக்கு மட்டும்தான் ~இரண்டு தாய்



MUMMY அம்மா
























புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## பேய்களின் ஆட்சி

பெயரில் மட்டுமே இருக்கின்றன நல்லாட்சியும் நல்லிணக்கமும். மற்றும்படி நாட்டில் நல்லாட்சியையும் காண வில்லை. நல்லிணக்கத்துக்கான வழியையும் காண வில்லை. நாட்டின் அனைத்துத் துறைகளிலும் ஊழலே மலிந்து கிடக்கிறது. அரச திணைக்களங்கள் – குறிப்பாக தொல்பொருள், வனவளத் திணைக்களங்கள் சிங்களப் பேரினவாதத்தின் அடிவருடிகளாக – காடைத்தனமாக செயற்படுகின்றன. அறிவித்தும் – அறிவிக்காமலும் உயரும் விலைவாசியால் மக்கள் நலிந்து கொண்டே செல்கின்றனர். ஆக 'நல்லாட்சி'யில் பேய்களே அரசு செய்கின்றன. இந்தப் பேய்களின் ஆட்சிக்கு துதி பாடித் துணை போகின்றனர் நமது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள்.

நமது பிரச்சினையை இனப் பிரச்சினை எனக் கூறினாலும், நமது உரிமைப் போர் நிலத்துக்கானதே. இனப் பிரச்சினையின் தோற்றுவாயாக அமைந்த அடக்குமுறைகளில் தலையாயதானது தமிழர் தாயகம் சிங்களக் குடியேற்றங்களால் நிரப்பப்பட்டதுதான். போர் காலத்தில் ஓரளவு தணிந்திருந்த சிங்கள ஆதிக்கக் குடியேற்றம், இன்று மீண்டும் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. முன்னர் அடாத்தாக காடையர்களைக் கொண்டுவந்து குடியிருத்தி நில ஆக்கிரமிப்பைச் செய்தது அரசாங்கம். இப்போது காடையர்களுக்குப் பதிலாக தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களத்தை ஏவி விட்டு தனது காரியத்தை அரங்கேற்றுகிறது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் தொடங்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம் 40 ஆண்டுகளைக் கடந்த போதும் மாறி மாறி அமைந்த அரசாங்கங்கள் அதை ஒருபோதும் கைவிடவில்லை. மாறாகப் பெரும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதிலேயே அக்கறை காட்டின. இதன் விளைவால் தமிழர்களால் இதயபூமி என சிறப்பிக்கப்பட்ட மணலாறு பிரதேசம் வெலிஓயா எனப் பெயர்பெற்று முற்றாக சிங்கள மயமாகி நிற்கிறது. அத்துடன் தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கு இணைய விடாத தடுப்பரணாகவும் உருவெடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டதை முழுமையாக கபளீகரம் செய்யும் நோக்கில் சிங்களக் குடியேற்றங்கள் இன்னும் இன்னும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. தனியே குடியேற்றத்துடன் மட்டும் பேரினவாதிகள் நின்று விடவில்லை. 'நூறு வருசத்துக்குப் பிறகு வரப்போகிற மூடர்களுக்கு தெரியவாபோகிறது. இந்த இம்சை அரசன் 23 ஆம் புலிகேசி என்பவன் புஜபல பராக்கிரமம் பொருந்தியவனாக இருந்தான் என்பதை நம்பும்" என்று வடிவேல் தனது இம்சை அரசன் படத்தில் சொல்லும் வாக்கியத்தை வேதவாக்காக எடுத்துக் கொண்டு செயற்படுத்தப்படுகிறது தொல்பொருள் திணைக்களம்.

அவர்கள் தமிழர்களின் கதைகளை தங்களுக்கு சார்பாகத் திரிபுபடுத்தி, பௌத்த சின்னங்களை தொல்பொருளாக்கி தமிழர் தேசத்தை மறுதலிக்கும் உத்தியாக தொல்பொருள் திணைக்களம் ஊடாக இல்லாதவற்றையும் இருப்பதாகக் காட்டிக் கொள்கின்றன. அண்மையில் கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட மோதிரம் ஒன்றையும் மூடி மறைத்துவிட்டது அந்தத் திணைக்களம். இப்படியே தொடர்ச்சியாக இடம்பெறும் செயற்பாடுகளுக்கு முடிவு என்ன?

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 17

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

பி.பி.ஸி. செய்தி எல்லோர் மனதிலும் அச்சத்தைத் தந்தது. சிலர் வெள்ளைக் கொடியைப் பிடித்துக் கொண்டு இராணுவப் பகுதிக்குள் போவதாக கதைத்துக் கொண்டனர். ஏற்கனவே வெள்ளைக்கொடி பிடித்துச் சென்றவர்களையும் இராணுவத்தினர் சுட்டதையும் அதிலிருந்து தப்பி வந்ததையும் அங்கிருந்த ஒருவர் கூறியதும் எல்லோருக்கும் மனதில் அச்சம் தலை விரித்தாடியது.

நந்திக்கடலோரக் காற்று சுமந்து வந்த அழுகிய உடலங்களின் துர் வாடையும் கடற்கரையோரமாக வீங்கிப் பருத்து மிதந்த பிணங்களின் கோலங்களும் அச்சத்தைத் தந்தன. சுதந்திரபுரம் வரை இருபதாயிரம், முப்பதாயிரம் எனக் கொடுத்து கொண்டுவந்த பொருட்களையும் விட்டு, உயிர்களையும் கொடுத்து வெற்று மனிதர்களாக நடக்கத் தொடங்கிய கரடு முரடான பயணத்தின் இறுதிக் கட்டத்தைத் தொட்டிருந்தோம். இனியும் யார் தப்பி யார் உயிரோடு இருப்போம் என்ற பீதியும் மனதை ஆட்டிப்படைத்தது.

சுதந்திரபுரத்திலிருந்து ஆச்சிபுரம் கடந்து தேவிபுரம் வந்தடைந்தோம். தேவிபுர வயல் வெளியில் வயல் தரையில் களைத்து கனத்த மனதோடு படுத்திருந்தோம். குடும்பத்தில் ஓர் உயிரைப் பறிகொடுத்த துயரம் இனி வாழ்வெதற்கென்ற வெறுமை செத்தால் எல்லாமே தீர்ந்து விடும் என்ற எண்ணங்களோடு எந்தவித பாதுகாப்புமில்லாமல் வயல் தரையில் படுத்திருந்தோம். வாணவேடிக்கை போல இரு பக்கத் தரப்பினரும் மாறிமாறி ஏவிய குண்டுப் பாய்ச்சலின் மினுக்கங்கள் அச்சத்தைத் தரவில்லை. ஏதாவதொன்று தலையில் விழுந்தால் சுமந்த துன்பமும் சிதறிப்போய்விடும் என மனது புலம்பியது.

வரம்போரமாக தூர விழுந்த ஷெல் வெடித்துச் சிதறி படுத்திருந்தவர்களின் உயிர்களைக் குடித்துக் குளிர்ந்து கொண்டிருந்தது. 'ஐயோ... அநியாயம்" என ஒப்பாரி ராகம் மட்டுமே இசைக்கும் பூமியாக வன்னிப் பெருநிலப்பரப்பு மாறியிருந்தது. பிணக் குவியல்கள் சுடலைகளை நோக்கிச் செல்லாமல் இருந்த இடங்களிலேயே புதைகுழிகளைத் தேடிக்கொண்டன. பச்சை வயல்வெளிகள் இரத்த ஆற்றை அப்பிக் கொண்டது. பிணக் குவியல்களின் தேசமானது வன்னிமண்.

தேவிபுரத்திலிருந்து பிறந்த குழந்தையோடு நடப்பதென்பது வேதனை தரும் விடயமே. பலர் பிள்ளைகளைப் பெற்ற வேதனையோடும் நடக்கத் திராணியற்று நடந்தனர். தேவிபுர வளைவில் இவ்வாறு பிள்ளை பெற்று நடந்த பெண் உதிரப்போக்கின் கனதியால் மயங்கி விழுந்து இறந்திருந்தாள். அந்தப் பயமும் அச்சத்தை தந்தது. ஆனாலும் விதி சுமந்த பயணம் நீண்டிருந்தது.

இரவு கடந்து பகலைத் தொட்டிருந்த இயற்கையை ரசிக்கும் மனநிலை யாருக்குமில்லை. தெருவில் இருப்பதை வைத்துச் சமைப்பதும் செல்லுக்கும் குண்டுகளுக்கும் விழுந்து படுப்பதும் இறந்தவர் காயப்பட்டோர் போக எஞ்சியோர் உயிர் சுமந்து பயணிப்பதும் வழமையாயிற்று. இப்படித்தான் பாதையோரமாக வெட்டப்பட்டு நன்கு பாதுகாப்பிடப்பட்ட பதுங்கு குழிக்குள் உயிர் காக்க இறங்கிக் கொண்டோம். அந்த பங்கருக்குள் இரு கண்களும் தெரியாத போராளி. அவர் ஒரு பெரும் பொறுப்பாளர். நன்கு கவரத்தக்க விதத்தில் பேசவல்ல பேச்சாளர் அங்கிருந்தார். அவரது மனைவி வெளியில் சென்றிருந்தார்.

நான் அவருடைய பெயரைக் குறிப்பிட்டு அழைத்து என்னையும் அறிமுகம் செய்து கொண்டேன். அவர் என்னுடைய கதைகளைக் கேட்கும் மனநிலையை இழந்திருந்தார். அந்தப் பதுங்கு குழியில் இருந்த என்னையும் அங்கிருந்தவர்களையும் திருமணம் செய்திட்டீர்களா? குழந்தைகள் இருக்குதா? எனக் கேள்வியைத் தொடுத்துக் கொண்டே எல்லோரும் போராடோணும் குழந்தை குட்டிகள் என சாட்டுச் சொல்லக் கூடாது என சொல்லிக் கொண்டே அவரது வோக்கிடோக்கியை உயிர்ப்பித்து யாரையோ அவசரமாக அழைத்தார்.

அவரது எண்ணத்தை நினைத்து நொந்தபடி பதுங்கு குழியில் இருந்து வெளியேறினேன். சில அடிகள் வைத்து கடந்திருப்பேன். அவரது வோக்கிடோக்கி என்னையும் கடந்து விழுந்து கதறிக் கொண்டிருந்தது. அதைப் பார்க்கவே எரிச்சல் எரிச்சலாக வந்தது. யாரோ உள்ளிருந்த ஒருவர் பறித்து எறிந்திருக்கலாம். என் அருகில் வந்த பெண் ஒருத்தி 'கண்கெட்டுப் போனவன்ர திமிரைப் பார். குழந்தை குஞ்சுகளை விட அவற்ற குஞ்சை காப்பாத்த சனம் சாகோணுமாம் துலைவான்." எனத் திட்டித் தீராது பெருகிய மொழிகள் வேதனையைத் தந்தது.

போராளிகள் நடந்து கொள்ளும் முறைகளும் வேதனை நிறைந்திருந்தது. பிள்ளைகளை வயது வேறுபாடின்றிப் போராடப் பிடித்தனர். பிள்ளைகள் தோற்றமாக இருப்பதை வைத்து அம்மாக்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் காட்டி நிரூபிக்கும் நிலையும் ஏற்பட்டிருந்தது. அவையும் ஏற்கப்படாமல் போனதால் வயிறு எரிந்து மண் அள்ளி சாபங்கள் நிறைந்த வார்த்தைகளால் திட்டிப்புலம்பினர்.

போர் - இடப்பெயர்வு - உயிரிழப்பு - குண்டுகளில் இருந்து பாதுகாக்கப் போராடத் துடிக்கும் துடிப்பு - பசி தீர்க்கப்படாத அவலம் - இடமின்மை - வாழ முடியாத இடங்களையும் சரிப்படுத்தி வாழும் துயரம். இந்த அவலத்துக்குள்ளும் அவலமாக சிறு பிள்ளைகள் போராளிகளாதல். பலர் களமுனையை விட்டு ஓடிவந்து பதுங்கியிருந்த நிலை. ஆளணிப் பற்றாக்குறை. போர் விதிகளை மீறிய இராணுவத்தின் தாக்குதல்கள்.

(சாட்சியம் நீளும்)

# இன ஒடுக்குமுறைக்கு களம் அமைக்கும் தமிழ் அரசியல்வாதிகள்

■ யோக நாராயணன்

அண்மையில் காலியில் இடம்பெற்ற சிங்களப் புத்தி ஜீவிகள் கலந்துகொண்ட நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த போது தமிழ் மக்கள் சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்தவில்லை என்றும் மாகாண சபைகளின் அதிகாரங்களில் மாற்றம் கொண்டு வந்தாலே போதுமானதாகும் எனத் தெரிவித்தார் எனவும் செய்திகள் வெளிவந்தன.

2010 ஆம் ஆண்டு இடம் பெற்ற நாடாளுமன்றத் தேர்தல் தொட்டு மாகாண சபைத் தேர்தல்கள் உட்பட ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தே மக்களின் ஆணையைக் கோரி போட்டியிட்டு ஒவ்வொரு தேர்த்ல்களிலும் அமோக வெற்றிகளைக் குவித்துக் கொண்டது. அப்படியான நிலையில் இப்படி ஒரு கருத்து வெளியானமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதுடன் பெரும் சர்ச்சைகளையும் ஏற் படுத்தியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா. சம்பந்தனோ தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜாவோ இக்கருத்துத் தொடர்பாக எவ்வித மறுப்போ அல்லது கண்டனமோ வெளியிடாத நிலையில் சர்ச்சைகள் மேலும் கூர்மையடைந்தன. ரெலோ இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் இயக்கத் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் சுமந்திரனின் கருத்துக்குக் கண்டனம் தெரிவித்தனர். மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சமஷ்டிக் கோரிக்கைக்கே ஆணை வழங்கினர் என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

இப்படியான குழப்பமான நிலையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பி னர் சுமந்திரன் தனது கருத்துக் களுக்கு விளக்கமளித்ததுடன் அவர் மேல் கண்டனங்கள் தெரிவித்தவர்களையும் சொல்லம்புகளால் வாங்கு வாங்கென வாங்கிவிட்டார்.

மேற்படி ஊடக சந்திப்பில் விளக்கமளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தான் சமஷ்டி என்ற பெயர்ப் பலகையை மட்டும்தான் நிராகரித்ததாகவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு சமஷ்டி முறையிலேயே அமைய வேண்டும் என்பதைத் தான் மறுக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தார். அதேநேரத்தில் அவர் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பற்றியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் பற்றியும் அவர் வெளியிட்ட கருத்துக்கள் ஏனையோரைத் துச்சமாக மதிக்கும் ஆணவத்தன்மையைக் கொண்டதாக மக்கள் மத்தியில் கேள்விகள் எழுந்துள்ளன.



சமஷ்டிக் கோரிக்கை அரசிய லமைப்பை மீறியதென மாவை சேனாதிராஜா உட்படச் சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னர் மீது வழக்குத் தொடுக்கப் பட்டதாகவும் தான் அவ் வழக்கில் வாதாடி சமஷ்டிக் கோரிக்கை அரசியலமைப்புக்கு விரோதமானதல்ல எனத் தீர்ப்புப் பெற்றதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் அத்தீர்ப்பை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கொண்டுபோய் மகாநாயக்க தேரரிடம் கொடுத்தார் எனவும் அதைக் கொண்டுபோய்க் கொடுக்க முதலமைச்சர் தேவையில்லை ஒரு பியோன் போதுமெனவும் தெரிவித்திருந்தார். அதாவது நான் பெரும் சாதனையாக வாதாடிப் பெற்ற தீர்ப்பை முதலமைச்சர் பயன்படுத்தினார் என்பதே அவரின் குற்றச்சாட்டு.

இன்னொருபுறம் அவருடைய பாணியிலே சொல்லப் போனால் அப்படி ஒரு தீர்ப்பைப் பெற சுமந்திரன் அவதாரம் எடுத்தவர் அல்லர் எனவும் வாதிடும் திறமை உள்ள எந்த ஒரு சட்டவல்லு நராலும் இப்படி ஒரு தீர்ப்பைப் பெற்றுக் கொண்டிருக்க முடியும். எனவே அத்தீர்ப்பு தனக்கு மட்டும்தான் சொந்தமானது வேறு எவரும் அதைப் பயன்படுத்த முடியாது என்ற வகையில் கூறுவது எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும். சமஷ்டிக் கோரிக்கை என்பது தமிழ் மக்களுக்கு உரியதன்றி எந்த ஒரு தனிநபரின் சொத்துமல்ல. அதுமட்டுமின்றி முதலமைச்சரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியேற்றியிருக்க வேண்டும் எனவும் அப்படி வெளியேற்றாமல் இருப்பது தவறு எனவும் அவர் தெரிவித்திருந்தார். முதலமைச்சர் தான்தோன்றித் தனமாக செயற்படுகிறார் என்பது அவரின் குற்றச்சாட்டு.

முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் சுமந்திரனைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இடையில் புகுத்தப்பட்டவர். சுமந்திரனின் தான்தோன்றித்தனமான நட வடிக்கைகளுக்காக அவர் வெளியேற்றப்படக்கூடாது. குறிப்பாக உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளினதோ, ஈ.பி.டி. பியினரதோ ஆதரவைப் பெறக்கூடாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் திட்டவட்டமாக அறிவித்திருந்தார். அந்த நிலை யில் வடக்கின் உள்ளூராட்சி மன்றங்களில் ஈ.பி.டி.பியுடன் இணைந்து ஆட்சியமைக்க முன்னின்று செயற்பட்ட சுமந்திரனையும் மாவை. சேனாதிராஜாவையும் ஏன் இன்னமும் வெளியேற்றவில்லை என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகும்.

இதுமட்டுமின்றி பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் தலைவர்களுக்கு சமஷ்டி பற்றிய விளக்கம் இல்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார். அவர்கள் காலப்போக்கில் திசைமாறி இந்தியாவின் சிறகுகளுக்குள் முடங்கி வழிதவறினாலும் தமிழ் மக்களுக்காக ஒரு சுயாட்சி அதிகாரத்தைப் பெற உயிர் விலை கொடுத்துப் போராடியவர்கள். அவர்களுக்கு சட்டத்தரணியிடம் விளக்கம் பெறவேண்டிய அவசியம் இல்லை. அதேவேளையில் சுமந்திரன் சொல்லும் சமஷ்டி எத்தகையது என்பதற்கு இதுவரை எந்த விளக்கத்தையும் கொடுக்கவில்லை. அதாவது சோவியத்யூனியனில் இருந்தமை போன்று பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சமஷ்டியா, அமெரிக்காவில் உள்ளது போன்ற சமஷ்டியா? இந்தியாவில் உள்ளது போல் மத்திய அரசால் கலைக்கக்கூடிய மாநில அதிகாரம் கொண்ட சமஷ்டியா என்பது பற்றி எவரும் தெளிவான விளக்கம் தரவில்லை. இவையெல்லாம் இல்லையெனில் விடுதலைப் புலிகளுக்கும் சந்திரிகா விஜயகுமாரதுங்கவுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிட்ட வடக்கு - கிழக்கு ஒன்றிணைந்த உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பகிர்வா?

இவற்றில் எதையும் அவர் களாலோ, தமிழ் மக்களாலோ நன்கு விளங்கிக் கொள்ள முடியும். ஆனால் சுமந்திரன் கூறியிருப்பதுபோல் மாகாண சபையின் அதிகாரங்களில் மாற்றம் கொண்டு வரும் சமஷ்டி என்றால் அவர்களுக்கு மட்டுமின்றி எவருக்குமே விளங்கிக் கொள்ளமுடியாது.


சொற்சிலம்பம் ஆடுவதும் வார்த்தைகளுக்கும் வெவ்வேறு வியாக்கியானங்கள் கொடுத்தும் தங்கள் தவறுகளை நியாயப் படுத்தியும் தமிழ் மக்களின் அரசியல் கடந்த பல வருடங் களுக்கு மேலாக விடிவை எட்ட முடியாத தொலைவிலேயே உள்ளது என்பதை மறுத்துவிட முடியாது. இந்த அவல நிலை தொடர்வதையே சுமந்திரனின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளும் ஏனையோரை உதாசீனம் செய்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேற வைக்கும் தந்திரமும் வெளிப்படுகின்றது.

இப்படியான நடவடிக்கைகள் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுத்தளம் நலிவடைந்ததை கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வெளிப்படுத்தியது.

இதேவேளையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் தம்மை ஒரு மாற்று அணியாக உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். அவர்களும் சி.வி.விகனேஸ்வரன் தவிர வேறு எவருடனும் கூட்டுச்சேரப் போவதில்லை எனத் தூய்மை வாதம் பேசி வருகின்றனர். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களிடம் உள்ள ஒரே பலம் ஒற்றுமை மட்டுமே. அந்த ஒற்றுமையைச் சிதைப்பதில் சுமந்திரன் ஒருபுறமும் கஜேந்திரகுமார் இன்னொருபுறமும் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

இது இனவாதிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் களமமைத்துக் கொடுக்கும் நடவடிக்கை என்பதே உண்மையான நிலைப்பாடாகும்.

# மஹிந்தர்கள் ஏன் குத்தி முறிகிறார்கள்?





கிடந்த புதன்கிழமையன்று மஹிந்தர்கள் கொழும்பைப் புரட்டிப் போடப்போவதாகக் கூறிக் களத்திலிறங்கினார்தள். பேரணிக்கு முன்பதாக நடைமுறையை விடப் பேரணி பற்றிய் பீடிகைகளே அதிகமாகக் காணப்பட்டன. சகல வழிகளிலும் ஊருலகத்தைப் பயமுறுத்துவதாக அறிக்கைகள் பறந்தவண்ணமிருந்தன. கொழும்பு முற்றுகையிடுவது எப்படி என்ற வட்ட மேசை மாநாடு வேறு.

மொத்தம்1,100 பஸ்கள் கொழும்பை நோக்கி வருமென்றும் விடிய விடிய கொழும்பு வாழ்வியல் தம்பிதமடைந்து விடும் என்று அறிக்கை விடப்பட்ட நிலையில் அரசாங்கமும் அதற்கு முகம் கொடுக்கின்ற விதத்தில் எல்லாவித எதிர் ஏற்பாடுகளையும் செய்திருந்தது. பஸ்கள் கொண்டு கிராமம் கிராமமாக மக்கள் ஏற்றப்பட்டனர். கொழும்பைப் பார்க்கின்ற ஆசையில் பலர் புறப்பட்டனர். போத்தல்களும், புரியாணிகளும், பணமும் வழங்கப்படும் என்று மக்கள் ஆசை காட்டப்பட்டனர். வந்தவர்கள் பலருக்கு ஏன் வந்தோம் என்றுகூடத் தெரியாமல் நடுக் கொழும்பில் இறக்கிவிடப்பட்டனர். பல ஆண்டுகள் கிராமத்தைப் பார்த்தே அலுத்துப் போனவர்கள் கொழும்பைப் பார்த்து ஆனந்தப்பட்டனர். பலருக்குத் தெரியாது தாங்கள் மைத்திரியையும், ரணிலையும் ஒரங்கட்டுவதற்காக் கொண்டுவரப்பட்டவர்கள் என்று.

ஆனால் மஹிந்தவின் பலத்தையம், பலவீனத்தையும் நன்கு அறிந்தவர் போல ரணில் செயற்பட்டுக் கொண்டார். நாய் குலைத்துவிட்டுப் போகட்டும் என்ற பாணியில் மைத்திரியும் குளித்துக் கும்பிட்டுவிட்டு அலாதியாக உட்கார்ந்திருந்து பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தனர் என்கின்றன செய்திகள். சொல்லப்போனால் மைத்திரியும், ரணிலும், மஹிந்தவும் இலங்கையில் அரசியல் செய்யவில்லை. மாறாக அவர்கள் வடிவத்தில் இந்தியா, அமெரிக்கா, சீனா போன்ற வல்லரசுகளின் முகமூடிகளாக அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே தற்போதைய அரசியல் சூழ்நிலை தெளிவாக அறியப்பட்டே அரசியல் சதுரங்கங்கள் நகர்த்தப்படுகின்றன.


சீனாவிடமிருந்து ராஜபக் ஷவைப் பிரித்தெடுக்கும் முயற்சியாகத்தான் புலி அழிப்புக்குத் துணைபோனவர்கள் இந்தியாவும், அமெரிக்காவும். ஆனால் புலி அழிப்பு வரை உங்களோடுதான் படுப்பேன் என்று கற்பூரம் கொளுத்திச் சத்தியம் செய்த ராஜபக்ஷ யுத்தம் முடிந்ததும் சீனாவுடனே தனது முதலிரவைக் கொண்டாடினார். ராஜபக்ஷ அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் புறங்கை காட்டிவிட்டுச் சென்றதன் விளைவே தனது கதிரையை ராஜபக்ஷ இழக்க நேரிட்டது.

கடந்த காலத்தில் அரசாட்சியில் அங்கம் வகித்த ராஜபக்ஷ அப்போது அனைத்துத் துறைகளிலும் நடைபெற்ற அபிவிருத்தியில் கணிசமான அளவு பணத்தைச் சூறையாடிச் சொத்துச் சேர்த்தவர். அதனால் தனது கதிரையைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று கனவு கண்டவர். அவர் கனவைச் சுக்குநூறாக உடைத்தவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அம்மையார். இந்தக் கருச்சிதைவை இம்மியேனும் எதிர்பார்க்காத ராஜபக்ஷவுக்கு பலத்த ஏமாற்றம் காத்திருந்தது. தான் தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பேன் என்ற நம்பிக்கையிலே முறையாகச் செய்ய வேண்டிய உடன்படிக்கைகளைக் கூடக் கைச்சாத்திடாமல் வாய்ப்பேச்சினாலே பல கோடி பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்களைச் சீனாவுக்குக் கையளித்தவர்.


வாறது வரட்டும் நானே காட்டு ராஜா என்று இருந்த ராஜபக்ஷவுக்குத் தனது சொத்துக்களைக்காப்பாற்றுவதே பெரும் பிரச்சினையாக உருவெடுத்த நிலையில் மீண்டும் அரசைக் கைப்பற்ற வேண்டிய எதேவை இருக்கிறது. மீண்டும் அரசைக் கைப்பற்றினால் மாத்திரமே பல விடயங்களை அவர் சாத்தியப்படுத்த முடியும். தொடர்ந்து சாபதிக்கவும் முடியும். நடைமுறையில் கண்ட அனுபவத்தைக் கொண்டு பார்த்தால் இந்தியாவும், அமெரிக்காவும் ராஜபக்ஷர்களை நம்பத் தயாரில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. ராஜபக்ஷவைக் கனவிலும் இலங்கை அரச கட்டிலில் இருத்திப்பார்க்க இரண்டு நாடுகளும் ஆயத்தமில்லை என்றது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. கடைசிவரை ராஜபக்ஷவையோ அவரது வாரிசுகளையோ வரவிடக் கூடாது என்பதுதான் அந்த நாடுகள் எடுத்த முடிவு. இந்த முடிவை பாகிஸ்தானின் புதிய பிரதமர் தேர்வு இன்னும் இறுக்கி இருக்கிறது. இலங்கையையும் முழுமையாகச் சீனப் பிடிக்குள் செல்ல விட்டால் தாம் தமது கடைகளைப் பூட்ட வேண்டிவரும் என்பது இந்தியாவுக்குத் தெரியும். நம்பி இருந்த மாலைதீவையும் சீனப் பிடிக்குள் இறுக்கிய பெருமை ராஜபக்ஷவையே சாரும்.

எனவே இந்தியாவும் தனது முரண்டுபட்ட நிலையை விடப்போவதில்லை. மஹிந்தர்களும் திரும்பிவருகின்ற குத்திமுறிவுகளை நிறுத்தப் போவதுமில்லை. 'ஆருக்கு வெற்றி வரும்? பொறுத்திரு மகனே!









பேரணியின் பின்னர் நடுவீதியில் ராஜபக்ஷவின் தொண்டர்கள்....

# புதைந்து கிடக்கின்ற புன்னகைகள்!

ஆர்.வைதேகி



நவீன் கவுதம்



எதிர்கொள்கிற மனிதர்கள் தொடங்கி, எக்கச்சக்கமாக எடுத்துத் தள்ளும் செல்ஃபி வரை எல்லாவற்றுக்கும் சிரிக்கிறோம். ஆனால், எந்தப் புன்னகையிலும் நிஜம் இருப்பதில்லை. சிரிப்பு என்பது, மனதுக்குச் சம்பந்தமில்லாத சம்பிரதாய மாகவே இருக்கிறது இன்று. 'கடைசியாக எப்போது மனம்விட்டுச் சிரித்தோம்?' என்ற பதில் தெரியாத கேள்வி, அநேகமாக எல்லோர் மனங்களிலும் இருக்கும். இந்த நிலையில், உயிரும் உணர்வும் சுமந்த புன்னகையை மீட்டெடுக்கும் பெரும்பணியைச் செய்கிறார் நவீன் கவுதம் என்கிற இளைஞர்.

அடிப்படையில் கொம்ப்யூட்டர் இன்ஜினீயரான நவீனின் அடையாளம், விவசாயம். ஆர்வமோ புகைப்படக்கலை. 'சுயம்' என்கிற பெயரில் இவர் எடுக்கும் புன்னகைப் படங்கள், பெண்மைக்கு மரியாதை செய்பவை.

திருவாரூர் பக்கத்துல இருக்கிற நீடாமங்கலம் எனக்குச் சொந்த ஊர். கொம்ப்யூட்டர் இன்ஜினீயரிங் முடிச்சுட்டு ஐ.ரி வேலையில இருந்தேன். குடும்பச் சூழலால் அந்த வேலையைத் தொடர முடியவில்லை. இப்போ, அப்பாகூட சேர்ந்து விவசாயம் பண்ணிட்டிருக்கேன். அப்பா ஃபிலிம் கேமராவுல போட்டோ எடுக்கிறதைப் பார்த்து வளர்ந்திருக்கேன். அப்பவே எனக்கும் அந்த ஆர்வம் ஒட்டிக்கிட்டது.

2012இல் எனக்குனு தனியா கமெரா வாங்கி பிராக்டிஸ் பண்ணிட்டிருந்தேன். 'சென்னை வீக் எண்ட் க்ளிக்கர்ஸ்' (CHENNAI WEEKED CLICKERS) என்று ஒரு குரூப் இருக்கு. அதன் உறுப்பினர்கள் எல்லாரும் வார இறுதி நாள்ல ஏதாவது ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து வோக் போவாங்க. 'கமெரா இருக்கு... போட்டோகிராபி கத்துக்கணும்' நினைக்கிறவங்களுக்கான பயிற்சிக் களம் அது. இப்படி எடுக்கிற படங்களை வருடத்துக்கு ஒருமுறை சென்னையில லலித் கலா அகாடமியில காட்சிக்கு வைப்பாங்க. அதைப் பார்த்து நானும் அவங்களோடு இணைஞ்சு கிட்டேன். வெளியிடங்களுக்குப் பயணப்பட்டு நிறைய படங்கள் எடுக்க ஆரம்பிச்சேன்.

இந்த வருஷம் போட்டிக்கான தலைப்பைப் பற்றி யோசிச்சிட்டு இருந்தப்போ, வண்ணதாசனின் கவிதை ஒண்ணு ஞாபகத்துக்கு வந்தது.

'தானாய் முளைத்த செடி என்கிறார்கள் யாரோ வீசிய விதையிலிருந்து தானே'

- இந்தக் கவிதைதான் எனக்கான இன்ஸ்பிரேஷன்.

பெண்களும் அப்படித்தான் சுயம்புகளாக இருக்காங்கனு தோணுச்சு. நான் சந்திச்ச பல பெண்களையும் அப்படித்தான் பார்த்திருக்கேன். அம்மா உள்பட என் வீட்டுப் பெண்களும் சரி, வழிப்போக்கர்களாக நான் சந்திச்ச பெண்களும் சரி, மாபெரும் மன தைரியத்துடன் எல்லாவற்றையும் கடந்து வருபவர்களாகவே இருக்காங்க. அந்தப் பெண்மைக்கு மரியாதை சேர்க்கிற வகையில் 'சுயம்பு' என்ற தலைப்பில் 30 நாள்களும் தினமும் ஒரு பெண்ணின் புன்னகையைப் பதிவு செஞ்சேன்" - நீண்ட நெடும் அறிமுகம் சொல்கிற நவீன், அந்த 30 நாள்களோடு இந்தப் புன்னகைப் பதிவை நிறுத்திக் கொள்ளாததுதான் ஹைலைட்.

"எந்தப் பெண்ணையும் அத்தனை சுலபத்துல சிரிக்க வெச்சுட முடியாது. 'பல்லு தெரியுற மாதிரி சிரிங்க'னு சொன்னா வெட்கப்படுவாங்க. அதையும் தாண்டி வெளிப்படும் போலித்தனமில்லாத அந்தச் சிரிப்பு, எனக்கு ரொம்பப் பிடிச்சது. இந்த மாதிரி முகங் களைத்தான் போட்டோ எடுக்கணும்னு எனக்கு நான் எந்த இலக்கும் வெச்சுக்கலை. பார்க்கிற பெண்கள் எல்லார்கிட்டயும் போட்டோ எடுக்கலாமானு கேட்பேன். சிலர் சம்மதிப்பாங்க. சிலர் ஆர்வமிருந்தாலும் தயங்குவாங்க. பக்கத்துல உள்ள வேற பெண்களை போட்டோ எடுத்து அவங்க கிட்ட காட்டும்போது அந்தத் தயக்கம் கொஞ்சம் மாறி, சம்மதிப்பாங்க.

பலரும் மனசுவிட்டுப் பெருசா சிரிச்சுடு வாங்க. ஆனாலும், அந்தப் படங்களைக் காட்டும்போது அவங்களுக்கெல்லாம் லைட்டா சிரிச்ச படங்கள்தான் பிடிச்சிருக் கும். பல்லு தெரியுற சிரிப்பை அவங்க விரும்புறதில்லை"

- புன்னகையில் பி.எச்.டியே முடித்தவராகச் சொல்கிறார்.

"வெறும் 30 நாள்கள் முயற்சியா தொடங்கினதுதான். ஆனாலும், அந்த முயற்சி என்னை ரொம்பவே மாத்தியிருக்கு. நான் முன்பைவிட மகிழ்ச்சியான மனுஷனா மாறி யிருக்கேன்கிறதுதான் உண்மை. அந்த அனுபவமும் மகிழ்ச்சியும் நான் சந்திக்கிற பெண்களின் புன்னகையும் அவங்களுடைய வாழ்க்கைக் கதைகளும்தான் இந்த முயற்சியைத் தொடர்ந்து செய்ய வெச்சிருக்கு" - நெகிழ்ந்து சொல்பவருக்கு ஒவ்வொரு புகைப்படமும் ஒரு நினைவோவியம்.

"மலைக்கிராமம் ஒன்றில் ஒரு பெண்ணை போட்டோ எடுத்தேன். 'போட்டோவுக் கெல்லாம் நிக்க மாட்டேன்'னு சொல்லிட்டு நகர்ந்துட்டாங்க. நானும் அவங்ககூடவே பேசிட்டு நடந்து போனேன். கஷ்டப்பட்டு கன்வின்ஸ் பண்ணி ஒரே ஒரு போட்டோ எடுத்துக் காட்டினேன். அது அவங்களுக்குப் பிடிச்சிருச்சு. அந்தக் கிராமத்துல வீட்டு வாசல்லதான் கல்யாணங்கள் நடக்குமாம். மரக்கிளைகளில் தோரணம் கட்டி, எல்லாப் பெண்களும் தலைநிறைய கலர் கலரா பூ வெச்சுக்கிட்டு, குங்குமப் பொட்டுடன் இருப்பாங்க. ஆனா, போட்டோவெல்லாம் எடுக்கிற வழக்கமில்லை. அந்தப் பெண்ணுக்கு நான் எடுத்ததுதான் வாழ்க்கையின் முதல் போட்டோவாம்!

பல பெண்களுக்கும் போட்டோ என்றாலே மேக்கப்பெல்லாம் போட்டுக்கிட்டு ரெடியாகணும் கிறதுதான் மனசுல பதிஞ்சிருக்கு. 'நான் அசிங்கமா இருக்கேன். என்னைப்போய் போட்டோ எடுக்கிறேன்னு சொல்றியே'னு கேட்டவங்க அதிகம். அப்படியெல்லாம் இல்லைனு புரியவெச்சு, யதார்த்தமா எடுக்கிற படங்களும் அழகா இருக்கும்னு எடுத்துக்காட்டினாத்தான் நம்புறாங்க.

நின்றா செல்ஃபி, உட்கார்ந்தா செல்ஃபி என்று நாமெல்லாம் சலிக்கச் சலிக்க போட்டோ எடுக்கிறோம். ஆனா, கிராமத்துப் பெண்கள் பலருக்கும் போட்டோங்கிறதே புதுசுதான். அதுலயும் எடுத்ததை உடனே பார்க்கிறதுங்கிறது புதுமையான அனுபவமா இருக்கும். சின்னக் குழந்தையில் தொடங்கி பாட்டி வரைக்கும் பெண்கள் எல்லோருக்கும் நிறைய கவலைகளும் பிரச்சினைகளும் இருக்கு. அதையெல்லாம் முகத்துல காட்டிக்காம, அன்றாட வேலைகளுக்கான தடைகளா நினைக்காம இயங்கிட்டிருக்காங்க. அவங் களுக்குள்ள புதைஞ்சுகிடந்த புன்னகையை வெளிப்படுத்துற சின்ன முயற்சியாதான் இதைச் செய்றேன்.

பெண்கள் எல்லோரும் அழகானவர்கள்தாம். அவர்களின் சிரிப்பும் மகிழ்ச்சியும் இன்னும் அழகானவை. அதை அவங் களுக்கு நிரந்தரமாக்க முடியலைன் னாலும் என் மூலமா ஒரு நாளா வது அவங்களைச் சிரிக்க வைக்கிறதை சந்தோஷமா செய்றேன்" - மனதிலிருந்து பேசுகிறார் மகிழ்ச்சியின் மீட்பர்.●

# வாரப்பலன்

## மேடம்
இவ்வார கிரகபலனின்படி சந்திரன் மட்டுமே ஓரளவு நற்பலன் வழங்குவர். பொறுப்பான செயல்களால் நன்மை அதிகரிக்கும். சகோதரர் உதவி கேட்பர். வாகனத்தில் செல்ல உரிய பாதுகாப்பு வேண்டும். பிறர் அன்பு பாராட்டுவர்.

## ரிஷபம்
இவ்வார கிரகபலனின்படி புதன், சந்திரனால் ஓரளவு நற்பலன் கிடைக்கும். செயல்களில் முன்யோசனை வேண்டும். உடன்பிறந்தவர்கள் ஆதரவாகச் செயல்படுவர். வாகனப்பயன்பாடு கட்டுப்பாட்டுடன் இருத்தல் அவசியம். வியாபாரம் செழித்து நல்ல பலனைத்தரும்.

## மிதுனம்
இவ்வார கிரகபலனின்படி குரு, சுக்கிரன் அனுகூலமாக இருப்பர். எந்த செயலிலும் முன்யோசனையுடன் ஈடுபடுவீர்கள். இனிய நிகழ்வுகள் மனதில் நல்ல மாற்றம் தரும். வாகனப்பயன்பாடு சராசரியாக இருக்கும்.

## கடகம்
இவ்வார கிரகபலனின்படி சனீஸ்வரர், சந்திரன் ஓரளவு நன்மை தருவர். நல்ல செயல்களால் சமூகத்தில் புகழ் பெறுவீர்கள். பணி நிறைவேற குடும்ப உறுப்பினர் ஆதரவாக இருப்பர். நோய் குறைந்து ஆரோக்கியம் பலம் பெறும்.

## சிம்மம்
இவ்வார கிரகபலனின்படி கேது, சந்திரன் நற்பலன் தருவர். உறவினர்களின் கூடுதல் அன்பு மகிழ்ச்சியைத் தரும். காரியாலய பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு.

## கன்னி
இவ்வார கிரகபலனின்படி ராகு, குரு, சுக்கிரன் அனுகூலமாக உள்ளனர். வாழ்வில் முன்னேற உதவியவர்களுக்கு நன்றி சொல்வீர்கள். பணிகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். வாகனத்தில் அதி வேகத்தைத் தவிர்க்கவும் பணக்கடன் பெறுவதில் நிதானம் வேண்டும்.

## துலாம்
இவ்வார கிரகபலனின்படி புதன், சுக்கிரன், சனீஸ்வரரால் ராஜயோகபலன் கிடைக்கும். மதிநுட்பத்துடன் செயல்படும் வீர்கள். அன்பானவர்களின் உதவி கிடைக்கும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். பிள்ளைகள் புதிய விஷயங்களில் ஆர்வம் கொள்வர்.


## விருச்சிகம்
இவ்வார பலனின்படி செவ்வாய், புதன், கேது அளப்பரிய நன்மையை வழங்குவர். தாமதமான பணிகளை புதிய யுக்தியால் நிறைவேற்றுவீர்கள். உறவினர்களின் உதவி மனதில் நெகிழ்ச்சியைத் தரும். கூடும். உடல் ஆரோக்கியம் பலம்பெறும்.

## தனுசு
இவ்வார பலனின்படி சந்திரனால் நற்பலன் கிடைக்கும். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். உறவினரின் உதவிகள் ஓரளவு கிடைக்கும். சிலர் புதிய வீடு, வாகனம் வாங்க நல்வாய்ப்பு வரும். மருத்துவ சிகிச்சையால் நோய் தொந்தரவு குறையும்.

## மகரம்
இவ்வார பலனின்படி, சந்திரன் மட்டுமே அனுகூல பலனைத் தருவார் பணிகளை ஆர்வமுடன் செயல்படுத்துவீர்கள். வளர்ச்சிப் பாதைக்கான புதியவழி உருவாகும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கள நிகழ்வு நடைபெறும்.

## கும்பம்
இவ்வார பலனின்படி குரு, சுக்கிரன், சனீஸ்வரரால் அளப்பரிய நன்மை கிடைக்கும். உடன் பிறந்தவர்க்கு உதவி செய்வீர்கள். தாயின் அன்பும் ஆசியும் மனதில் ஊக்கம் தரும். வழக்கு விவகாரத்தில் சுமூகத் தீர்வு கிடைக்கும்.

## மீனம்
இவ்வார பலனின்படி கிரகங்கள் அனுகூலபலனைத் தருவர். உழைப்பிற்கான ஊதியம் கிடைக்கும். உறவினர் மற்றும் நண்பர்களிடம் நற்பெயர் பெறுவீர்கள். வெளியூர் பயணம் எதிர்பார்ப்பை நிறைவேற்றும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.



இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயமும், வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் "தெய்வீக சுபானுபவம்" என்னும் நிகழ்சி கடந்தவாரம் நடைபெற்றது.



கடந்த 02 ஆம் திகதி யாழ்ப்பாணம் சேர். பொன். இராமநாதன் வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் செல்வி வைஷ்ணவி ஜெகரூபனின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. பிரதம விருந்தினர்களாக அரசாங்க அதிபர் திரு. நாகலிங்கம் வேதநாயகமும், திருமதி. பிரதீபா வேதநாயகமும் கலந்து சிறப்பிந்திருந்தனர்.



அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் செவட்டன செவன வீட்டுத் திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆரம்பப் பணிகள் பச்சிலைப்பள்ளி, கண்டாவளை ஆகிய இடங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



கிழக்குப் பலகலைக் கழகத்திலிருந்து விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுக் காணாமல் போனோரின் 28ஆவது ஆண்டு நினைவேந்தல் வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாக முன்றிலில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.




முல்லைத்தீவு உடையார்கட்டுப் பிரதேசத்திலுள்ள கம நல சேவை நிலையத்தினரால் 100 பாடசாலை மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்குரிய பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைத்த நிகழ்வு உடையார் கட்டு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

# அறிவுத்திறனும், உடல் பலமும்



ஒரு முதலாளி, தனக்குச் சொந்தமான பரந்த இடம் முழுவதிலும் தென்னங்கன்றுகளை நட வேண்டும் என்று முடிவு செய்தார். மரக் கன்றுகள் நடுவதற்குப் பள்ளம் வெட்ட வேண்டிய வேலையை ஒருவனிடம் ஒப்படைத்தார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, நன்றாக உழைத்து நிறையச் சம்பாதித்துவிட வேண்டும் என்று நினைத்தான் அந்த வேலையாள் . அவன் தன் மகளின் திருமணத்திற்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் காசு சேர்த்து வருகிறான். இன்னும் போதுமான அளவு பணம் சேரவில்லை. அவன் முதல் நாளில் இருபது மரக் கன்றுகளை நடுவதற்குப் பள்ளம் தோண்டினான். அவன் உழைப்பைக் கண்டு முதலாளி அவனை மிகவும் பாராட்டினார். பிறகு, ஒவ்வொரு நாளும் அவன் தோண்டுகின்ற பள்ளத்தின் எண்ணிக்கை குறைந்து வரத் தொடங்கியது. நாற்பதாம் நாளில் அவன், காலையிலிருந்து மாலை வரை எவ்வளவோ முயன்றும் இரண்டு பள்ளங்கள்தான் தோண்ட முடிந்தது. இதனால் அந்த வேலையாள் மிகவும் ஏமாற்றமடைந்தான். "முதல் நாளின்போது இருபது பள்ளங்கள் தோண்டியவன் நாற்பதாம் நாளில் இரண்டு பள்ளம் தோண்டுகிறானே, இவனுக்கு என்ன ஆயிற்று?" என்று முதலாளியும் குழம்பினார். அவர் வேலையாளின் மண்வெட்டியை வாங்கிப் பரிசோதித்துப் பார்த்தார். மண்வெட்டியின் முனை கூர் மழுங்கியிருந்தது. அவர் : "நீ உன் பணி ஆயுதத்தைக் கூர்தீட்டி நன்றாக வைத்துக் கொண்டால் என்ன?" என்று கேட்டார். "இதற்கெல்லாம் எனக்குக் கொஞ்சம்கூட நேரமே இல்லை அய்யா! நான், நாள் முழுதும் சிறிதும் ஒய்வெடுக்காமல் உழைத்துக் கொண்டிருக்கிறேன். நிறைய வேலை செய்து நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டுமே!" என்று வேலையாள் பதிலுக்குக் கூறினான். அதற்கு முதலாளி " இந்த மண்வெட்டியைப் போலத்தான் நாமும். நம் அறிவுத்திறனும், உடல் பலமும் மழுங்கிவிட்டால் நம்மால் எதுவுமே செய்யமுடியாது. நமக்கு எவ்வளவோ கடமைகள் இருக்கலாம். நிறைய உழைக்க வேண்டி வரலாம். ஆயினும் நம் உடலையும், மனதையும், அறிவையும் எப்போதும் பேணிக் கூர்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நம்மால் நிறையச் சாதிக்க முடியும். நம் இலக்கை விரைவில் அடைய முடியும்!" என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். வெட்கித் தலைகுனிந்த வேலையாள் , மீண்டும் பதிய வேகத்தோடு வேலை செய்தான். முதலாளியும் அகமகிழ்ந்து தாராளமாக ஊதியம் கொடுத்து அனுப்பினார்.

"சோம்பேறிகள் சாத்தானின் அடிமைகள்"

## கேள்விக்கென்ன பதில்? (இலங்கை)

1. இலங்கையில் அதிக மழை பெறும் நகரம் எது?
2. இலங்கையின் மிகக்கூடிய நீளம் எத்தனை மைல்?
3. பழைய கண்டி அரசரின் துறைமுகம் எது?
4. இலங்கையின் மிகக் கூடிய அகலம் எவ்வளவு?
5. யாழ்ப்பாணத்தில் உற்ற வற்றாத நீர் நிலை எது?

விடைகள்
1. கண்டி 2. 270மைல் 3. புத்தளம்
4. 140மைல் 5. நிலாவரை

## பழமொழி ஒன்று விளக்கங்கள் இரண்டு



**ஆனைக்கு ஒரு காலம் வந்தால்**
**பூனைக்கும் ஒரு காலம் வரும்**

**தற்போதைய விளக்கம்:**

இப்பழமொழிக்குக் காலம் காலமாகக் கூறப்பட்டு வரும் விளக்கம் இதுதான்:

ஆனை போல பெரியவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு நல்ல காலம் வந்தால்

பூனை போல சிறியவர்களுக்கும் அவரது வாழ்வில் ஒரு நல்ல காலம் வரும்.

**கருத்து 2:** ஆனை என்பதனை ஆநெய் என்பதின் திரிபு என்றும் பூனை என்பதனை பூநெய் என்பதின் திரிபு என்றும் கொண்டு, இப்பழமொழியை

ஆநெய்க்கு ஒரு காலம் வந்தால் பூநெய்க்கும் ஒரு காலம் வரும்.

என்று மாற்றிக் கொண்டு கீழ்க்கண்டவாறு பொருள் கூறுகின்றனர்.

ஆநெய் ஆகிய பசுநெய்யினை ஒரு காலத்தில் உண்டால் பூநெய் ஆகிய தேனையும் ஒரு காலத்தில் உண்ணவேண்டி வரும். அதாவது, பசுநெய்யினை உணவுடன் சேர்த்து அதிகம் உண்டால் அதனால் உண்டாகும் கொழுப்பினைக் குறைக்க அதன்பின்னர் தேனை உண்ண வேண்டி வரும் என்று விளக்கம் கூறுகின்றனர்

# விடுகதைகள்

1. எவர் கையிலும் சிக்காத கல். எங்கும் விற்காத கல். அது என்ன?
2. கடலிலே கலந்து , கரையிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ எது?
3. கந்தல் துணி கட்டியவன் முத்துப் பிள்ளையைப் பெற்று மகிழ்ந்தான். அது என்ன?
4. கறுப்பர்கள் மாநாடு போட்ட இடத்தில் கண்ணீர்ப் பிரவாகம் . அது என்ன?
5. காட்டிலே பச்சை. கடையிலே கறுப்பு. வீட்டிலே சிவப்பு. அது என்ன?

விடைகள்
1. விக்கல் 2. உப்பு 3. சோளக்கதிர்
4. மேகம்-மழை 5. மரம்-கரி-நெருப்பு





## ஏற்றுமதியாளர்கள் யார்?

1. சீனி- கியூபா
2. கொக்கோ - பிரேசில்
3. தேயிலை - இலங்கை
4. பேரீந்து - ஈராக்
5. மீன் - நோர்வே
6. றப்பர் - மலேசியா
7. ஆட்டிறைச்சி - நியூசிலாந்து
8. சணல் - பாகிஸ்தான்
9. கம்பளி ஆடை - அவுஸ்திரேலியா
10. நிலக்கரி - அமெரிக்கா

# தமிழ் கற்போம்

பெயர்ச்சொல் என்பது ஒன்றன் பெயரை உணர்த்தும் சொல் ஆகும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் பெயர்ச்சொற்கள் தோன்றும். ஆதலால் பெயர்ச்சொல்


பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர், சினைப் பெயர், பண்புப் பெயர்(குணப் பெயர்) தொழிற் பெயர் என்று ஆறு வகைப்படும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பவற்றைப் பொருளாதி ஆறு அன்றும், பொருள் முதலாறு என்றும் கூறுவர்.




எ.கா:

பொருட்பெயர் : மனிதன், பசு, புத்தகம்
இடப்பெயர் : யாழ்ப்பாணம், உடுவில்
காலப்பெயர் : மணி, நாள், மாதம், ஆண்டு
சினைப்பெயர் : கண், கை, தலை
பண்புப்பெயர் : இனிமை, நீலம், நீளம், சதுரம்
தொழிற்பெயர் : படித்தல், உண்ணல், உறங்குதல்

# பேதமை செய்யும் கண்கள்



ஸ்ரீரங்கம் பள்ளிகொண்ட பெருமாளை திருவடியில் தொடங்கித் திருமுடி வரை சேவிக்கவேண்டும் என்பது ஐதீகம்.

அரவிந்த நயனனான ஸ்ரீரங்கத்துப் பெருமானை ஹபெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே' என்று போற்றிப் பாடுகிறார் ஆழ்வார். இப்பாசுரத்துக்கு ஏற்ப அவரது கண்கள் விரிந்த தாமரை இதழ் போல் காணப்படுகின்றன.

அன்பையும் அமைதியையும் பொழியும் அந்தக் கண்களை 'திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல் அங்கண் இரண்டும்கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல் எங்கள்மேல் சாபம் இழிந்தேலோரெம்பாவாய்' என்று போற்றுகிறாள் ஆண்டாள்.

ஸ்ரீரங்கத்துப் பெருமாளின் கண்கள் அருகருகே ஒரு சேர சூரியனின் வளர்ச்சி தரும் ஒளியையும், சந்திரனின் குளிர்ச்சி தரும் ஒளியையும் கொண்டு பக்தர்களின் சாபங்கள் எல்லாம் தீய்ந்துபோய், வளம் பெருகும் வாழ்வு தரும் என்கிறாள் ஆண்டாள்.



# இருளில் வெளிச்சம்

நள்ளிரவு உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட மதீனா நகரம். சலசலக்கும் பேரீச்ச மர ஓலைகளின் ஓசையைத் தவிர எங்கும் நிலவியது நிசப்தம். நெடிதுயர்ந்த உருவம் ஒன்று ஒவ்வொரு தெருவாய் நடந்து கொண்டிருந்தது. சற்றுத் தொலைவில் ஆளரவமற்ற பாலைவனத் திடலில் மினுக் மினுக்கென்று விளக்கு எரிய அதை நோக்கி நடந்தது.

அங்கே ஒரு மனிதர் சோகத்துடன் அமர்ந்திருந்தார். விசாரித்ததில் கூடாரத்தில் பிரசவ வேதனையில் அவரது மனைவி துடிக்கும் விடயம் தெரிந்தது. மருத்துவம் பார்க்கவும் அவரிடம் பணமில்லை.

இதைக் கேள்விப்பட்டதும் தன் வீட்டுக்கு விரைந்தது அந்த உருவம். தனது மனைவியை உடனே தன்னுடன் கிளம்பும்படி பணித்தது. "நீங்கள் இன்னும் சாப்பிடவில்லையே?" என்று கேட்டார் மனைவி.

"அந்த உணவு இன்னொரு வருக்குத் தேவைப்படுகிறது!"

"கொஞ்சம் பாலாவது குடிக்கலாமே?" என்றார் மனைவி.

"வேண்டாம்.. பிரசவ வேதனையிலிருக்கும் அந்தப் பெண்மணிக்கு அது தேவைப்படலாம். அவற்றை எடுத்துக்கொண்டு சீக்கிரம் கிளம்பு... போகலாம்!"- என்றது அவ்வுருவம்.

சற்று நேரத்தில் அவர்கள் கூடாரத்தை அடைந்தார்கள். மனைவியை உள்ளே அனுப்பி வைத்த உருவம் கூடாரவாசியிடம் பேசிக் கொண்டிருந்தபோதே, கூடாரத்திலிருந்து. "அரசரே உங்கள் நண்பருக்கு வாழ்த்துக் கூறுங்கள். உங்கள் பூமியில் புதிய அழகிய ஆண் குழந்தை பிறந்திருக்கிறது!" - என்று குரல் வந்தது.

அரசன் என்ற சொல் கூடாரவாசியை நிலைகுலைய வைத்தது. பதறியவாறு அவர், "இந்த நாட்டின் அரசன் தாங்களா... இப்படி...?" - என்றார்.

"இதில் வியப்படைய என்ன இருக்கிறது சகோதரரே? ஒரு நாட்டின் தலைவன் உண்மையில் மக்களின் தலையாய ஊழியனில்லையா?" - என்றார்கள் மாறு வேடத்தில் இருந்த அரசர் உமர்.

# ஆண்டவருக்கு உதவுங்கள்...!

பரலோக இராச்சியம் பல்வேறு மக்களும் கூடியிருக்கிறார்கள். அவர்களுக்கான வரங்களையும் தண்டனைகளையும் முடிவு செய்ய வேண்டிய நேரம். தேவகுமாரன் அந்த மக்களில் சிலரை தனது வலதுபுறம் நிற்கும்படி சொன்னார். மற்றவர்களை இடதுபுறம் நிற்கும்படி சொன்னார்.

வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காகவே தயார்ப்படுத்தப்பட்டிருக்கும் இராச்சியத்தை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார். அவர்கள் செய்த நல்ல காரியம் என்ன என்பதையும் அவர் விளக்கினார் இயேசு பிரான். தான் கஷ்ரத்தில் இருந்தபோது உதவி செய்தவர்கள் நீங்கள் என்றார்.

"பசியாக இருந்தபோது உணவு கொடுத்தீர்கள். தாகமாக இருந்தபோது தண்ணீர் கொடுத்தீர்கள். ஆதரவற்ற அந்நியனாக இருந்தபோது என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள். உடை இல்லாமல் தவித்தபோது உடை கொடுத்தீர்கள். படுத்த படுக்கையாக இருந்தபோது என்னை விசாரிக்க வந்தீர்கள். காவலில் வைக்கப்பட்டிருந்தபோது என்னைப் பார்க்க வந்தீர்கள்" என்றார் இயேசு.

சொர்க்கத்துக்கு வழிகாட்டப் பட்டவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆண்டவர் எப்போது பசியாகத் தம்மிடம் வந்தார்? எப்போது தாகத்தோடு தம்மிடம் வந்தார்? அவர் எப்போது ஆதரவற்றவராக இருந்தார்? நோய்வாய்ப்பட்டுப் படுத்திருந்தது எப்போது என்னும் கேள்விகள் அவர்கள் மனங்களில் எழுந்தன. அந்தச் சமயத்தில் நாங்கள் அவருக்கு உதவிசெய்ததாக நினைவில்லையே என்று குழம்பினார்கள்.

"ஏழை, எளியவர்கள், ஆதரவற்றவர்கள் ஆகியவர்களுக்கு நீங்கள் செய்த உதவிகள் எனக்கே செய்த உதவிகள். அவர்களுக்குச் செய்ததன் மூலம் நீங்கள் எனக்குத்தான் உதவி செய்தீர்கள்" என்றார் இயேசு கிறிஸ்து.

பிறகு அவர் தன் இடது பக்கம் நிற்பவர்களைப் பார்த்து, "நீங்கள் சபிக்கப்பட்டவர்கள். பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நெருப்பில் போய் விழுங்கள்" என்றார்.

அவர்கள் தலை குனிந்து நின்றார்கள். தங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக்கான காரணத்தைத் தெரிந்துகொள்ள அவர்கள் விரும்பினார்கள்.

"நான் பசியாக இருந்தபோது எனக்கு உணவு அளிக்க மறுத்தீர்கள். தாகமாக இருந்தபோது தண்ணீர் தரவில்லை. ஆதரவற்ற அந்நியனாக இருந்தபோது என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை"




என்றார் இயேசு.

அவர்களுக்குப் புரியவில்லை. "எளிய மனிதர்கள் பலர் தங்களுக்குக் கஷ்டம் நேர்ந்தபோது உங்களை நாடி வந்து உதவி கேட்டார்கள். அவர்களுடைய கோரிக்கையை நீங்கள் உதாசீனம் செய்தீர்கள். அவர்களுக்கு மறுத்தது எனக்கு மறுத்தது போலத்தான். நீங்கள் உதாசீனம் செய்தது அந்த ஏழைகளை அல்ல. என்னைத்தான்" என்றார்.

நம் ஒவ்வொருவர் முன்னாலும் ஆண்டவர் ஒவ்வொரு நாளும் வருகிறார். ஏழைகள் வடிவில். நோயாளிகள் வடிவில். ஆதரவற்றவர்கள் வடிவில். அவர்களுக்கு நாம் செய்யும் உதவி இறைவனுக்குச் செய்யும் உதவி.

# அடுத்தது




**இறுதிப் போரில் தமிழ் மக்களுக்குத் தொண்டாற்றிய மருத்துவப் பெருமக்களில் ஒருவர் மருத்துவர் டி.வரதராஜா. உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பணியாற்றிய அவர், இப்போது அமெரிக்காவில் வசிக்கிறார். தடம் இதழுக்காக அவர் வழங்கிய நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது.**

**செவ்வி: அ.முத்துலிங்கம்**

**சில** நாள்களுக்கு முன்னர், யூ ரியூபில் முள்ளிவாய்க்கால் போர் நாள்களில் அங்கே பணிபுரிந்த மருத்துவர் டி.வரதராஜாவுடைய செவ்வியைப் பார்த்தேன். அது போர் மும்முரமாக நடந்த இறுதி நாள்களில், 2009 மே 15 அன்று எடுக்கப்பட்டது. போர் முடிவுக்கு வருவதற்கு மூன்றே நாள்கள் இருந்தன. முள்ளிவாய்க்காலில் அவர் கொடுத்த கடைசி நேர்காணல்.
அதிலே ஒரு கேள்வி. "உங்களுக்குச் சாவுக்குப் பயமில்லையா?" அவர் பதில் சொல்கிறார், "சாவுக்குப் பயமில்லாமல் இருக்குமா? நேற்று இரவு நான் வழக்கம்போல பதுங்குக் குழிக்குள் இரவைக் கழித்தேன். சாவு எந்த நேரமும் வரலாம். அடுத்த 10 நிமிடத்தில் ஒரு குண்டு விழுந்து நான் இறக்கலாம். இன்று இரவை நான் காண்பேனோ தெரியாது."

இந்தச் செவ்வியைக் கொடுத்த மருத்துவர் வரதராஜாவுக்கு என்ன ஆனது? அவர் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அரசின் எச்சரிக்கையை மீறி, போர் நிலவரங்களைக் களத்திலிருந்து பி.பி.சிக்கும், ஐ.நாவுக்கும் அவ்வப்போது தொடர்ந்து அறிவித்தவர் இவர்தான். முள்ளிவாய்க்கால் பேரவலம், மனித உரிமை மீறல்கள், இன அழிப்பு, போர்க்குற்றம் பற்றியெல்லாம் பின்னாளில் ஐ.நா. பொதுச் சபையில் சாட்சியம் சொன்னவர், ஜெனிவா மனித உரிமை கண்காணிப்பகம் நடத்திய மாநாட்டில் பங்களித்தவர். நோபல் சமாதானப் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டவர். எப்படியோ அவரைத் தொடர்புகொண்டு சந்தித்தேன். முதல் கேள்வியாகக் கேட்டேன்.

**"நீங்கள் முள்ளிவாய்க்காலில் 15 மே 2009இல் கடைசியாகக் கொடுத்த நேர்காணலுக்குப் பின்னர் என்ன நடந்தது?**

'நான் சொன்னதுபோலவே நடந்தது. அந்த நேர்காணல் முடிந்த 10ஆவது நிமிடத்தில் எனக்குக் குண்டுக்காயம் பட்டு அறிவிழந்து நிலத்தில் விழுந்தேன். பெரிய வெளிச்சம்தான் ஞாபகம் இருக்கிறது. என்னை இராணுவம் கைது செய்தது. என்னுடைய வலது கை, குண்டுபட்டு முற்றிலும் செயலிழந்துபோனது. எனக்குத் தகுந்த சிகிச்சையளிக்காமல் தாமதப்படுத்தினார்கள். நான் அரசாங்கத்தின் எதிரியாகவே கருதப்பட்டேன். நான் முல்லைத்தீவு மாவட்டம் பிராந்திய சுகாதாரச் சேவை பணிப்பாளர், அரச மருத்துவர். அப்படியிருந்தும் என்னை புலிகளின் ஆள் என்று சந்தேகப்பட்டார்கள்.

பேருந்தில் ஏற்றி என்னை வவுனியாவுக்குக் கொண்டுபோக முயற்சித்தபோது, பஸ்காரன் சொல்கிறான், "இவனுக்கு மேலே பஸ் ஏற்றுவேனே ஒழிய இவனை பஸ்ஸில் ஏற்றமாட்டேன்." என்னைக் கொழும்புக்கு அழைத்துச் சென்று விசாரணை என்ற பெயரில் கொலை மிரட்டல் செய்தார்கள். பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் என்னை நான்கு வருடம் சிறைக்கு அனுப்பப் போவதாக பயமுறுத்தினார்கள்.

பின்னர், ஊடகவியலாளர் மாநாட்டைக் கூட்டி, அதில் நான் அன்று வரை கொடுத்த நேர்காணல்கள் எல்லாம் பொய்யானவை என்று சொல்ல வேண்டும் என என்னை நிர்ப்பந்தித்தார்கள். அப்படிச் செய்தால் எனக்கு விடுதலை கிடைக்கும். அப்படியே செய்தேன். உயிர் வாழ்ந்தால்தானே உண்மையை உலகத்துக்குச் சொல்லமுடியும். அமெரிக்கத் தூதரகத்தில் அரசியல் தஞ்சம் கோரினேன். அவர்களுக்கு என் கதை முழுக்கத் தெரியும். 2011 நவம்பர் மாதம் அமெரிக்கா வந்துசேர்ந்தேன்.

"முள்ளிவாய்க்கால் வாழ்க்கையில் உங்கள் மனதைத் தாக்கிய சம்பவம் ஒன்றைக் கூறமுடியுமா?"

"ஒன்றல்ல, நிறைய இருக்கின்றன. ஒரு தாய் தன்னுடைய இரண்டு பிள்ளைகளுடன் ஆஸ்பத்திரிக்கு வந்தார். அவருக்கு வேறு ஒருவரும் இல்லை. அந்த இரண்டு மகன்கள்தான் அவரிடமிருந்த சொத்து. ஒருவனுக்கு 10 வயது, மற்றவனுக்கு 8 வயது. 'என்ரை பிள்ளைகளைப் பாருங்கோ, என்ரை பிள்ளைகளைப் பாருங்கோ' என்று கதறியபடியே இருந்தார். புளியமரத்தின் கீழே உட்கார்ந்திருந்த அவர் மடியின் மீது எட்டு வயதுப் பையனின் தலை கிடந்தது. மூத்தவன் கீழே வெறும் தரையில் சரிந்து படுத்திருந்தான். மூத்த பையனை நான் முதலில் சோதித்தேன். அவன் எப்போதோ இறந்துபோயிருந்தான். அந்த அம்மாவிடம் பையன் இறந்துபோனதைச் சொன்னேன். 'ஐயோ, ஐயோ' எனத் தலையிலடித்துக் கதறினார்.

'இவனைப் பாருங்கோ' என்று மடியில் கிடந்த மற்றவனைக் காட்டினார். அவனுடைய தலையை ஒரு சன்னம் துளைத்து மறுபக்கம் போயிருந்தது. 'ஒன்றுமே செய்ய முடியாது. சிறிது நேரத்தில் இறந்துவிடுவான்' என்ற கொடூரமான வார்த்தைகளைச் சொன்னேன். இப்போது அதை நினைத்துப் பார்க்கும்போது என் மேலேயே வெறுப்பு ஏற்படுகிறது. ஓர் ஆறுதல் வார்த்தைகூடச் சொல்ல நேரமில்லை. ஒவ்வொரு நோயாளரையும் பார்த்து முடித்த பின்னர் உதவியாளர் 'அடுத்தது' (NEXT) எனக் கத்துவார். நோயாளி வருவார். அவர் போனதும் 'அடுத்தது' எனக் கத்துவார். இப்படி என் வாழ்க்கை யந்திரமயமாக மாறியிருந்தது."

**"உங்கள் இளமைக்காலம் பற்றிக் கூறுங்கள்?"**


"ஒரு வார்த்தையில் சொல்வதானால் 'அலைச்சல்தான்'. 1975 இல் தம்பலகாமம் எனும் ஊரில் பிறந்தேன். எனக்கு 10 வயது நடந்தபோது, ராணுவம் ஊரைச் சுற்றிவளைத்தது் சிலரைக் கைதுசெய்து ஒரு கடையினுள் அடைத்து அதற்குத் தீ வைத்தது. சின்ன வயதில் அந்தக் கருகிய உடல்களைப் பார்த்தேன். அந்தக் காட்சி என்மனதில் என்றென்றுமாக நிலைத்துவிட்டது. இராணுவத்தின் பிடியிலிருந்து தப்ப முல்லைத்தீவுக்குக் குடிபெயர்ந்தோம். அங்கே படிப்பை விட்டுவிட்டு ஒரு கடையில் பொட்டலம் கட்டும் வேலை பார்த்தேன். நான் ஏற்கெனவே ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததாகச் செய்தி வந்தது. எனக்குப் படிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

தம்பலகாமத்துக்கும் முல்லைத்தீவுக்குமாகப் பல தடவை அலைந்தோம். இறுதியில் முல்லைத்தீவுப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தேன். எப்படியும் படித்து ஆளாக வேண்டும் என்ற வெறி என்னுள் இருந்தது. பள்ளிக்கூடத்தில் பகலிலும் அதே பள்ளிக்கூடத்தில் அரிக்கன் லாம்பில் இரவிலும் படித்தேன். அங்கேயே பெஞ்சில் தூங்கினேன். அப்படித்தான் 94 இல் மருத்துவப் படிப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டேன். போரினால் பல தடவை படிப்புக்கு இடையூறு ஏற்பட்டாலும் தொடர்ந்து படித்து 2004 இல் மருத்துவப் பட்டம் பெற்றேன்."

"உங்கள் மருத்துவச் சேவை முதலில் எங்கே தொடங்கியது?"

"திருகோணமலையில் உள்ள ஒரு சின்ன ஊர் ஈச்சிலம்பற்று. 70,000 பேர் அங்கே மருத்துவ வசதியில்லாமல் கஷ்டப்பட்டார்கள். தண்ணீர் இல்லை, மின்சாரம் இல்லை, ஆகவே ஒரு மருத்துவரும் அங்கே போகச் சம்மதிக்கவில்லை. நானாகவே போய் அந்த ஊருக்கு மாற்றம் கேட்டு மருத்துவராகப் போனேன். எப்படியாவது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என நினைத்தேன்.

போர் காரணமாக மக்கள் குடிபெயர்ந்தபோது, நானும் அவர்களுடன் மட்டக்களப்புக்குப் போனேன். அங்கே எனக்கு எதிரிகள்





பெருகிவிட்டார்கள். இராணுவமும் கருணா அணியும் என்னைக் கொல்ல தருணம் பார்த்திருந்தனர். பல தடவை மயிரிழையில் உயிர் தப்பினேன். ஒவ்வொரு தடவையும் நான் பிறந்ததற்கான கடமை இன்னும் தீர்க்கப்படவில்லை என நினைத்துக்கொள்வேன். 2007 டிசம்பரில் முல்லைத்தீவுக்கு என்னை மாற்றினார்கள். அங்கே மே 2009 இல் போர் முடிவுக்கு வரும் வரைக்கும் சேவையாற்றினேன்."

**"முள்ளிவாய்க்காலில் சிசேரியன் அறுவைச் சிகிச்சை செய்திருந்ததாகச் சொல்லியிருந்தீர்கள். அதிலெல்லாம் உங்களுக்குப் பயிற்சி இருந்ததா?"**

"மருத்துவக் கல்லூரியில் எல்லாவிதமான நோய்களுக்கும் காயங்களுக்கும் சிகிச்சை முறை கற்பித்திருந்தார்கள். பல துறைகளிலும் அடிப்படை அறிவை வளர்த்துக் கொண்டேன். குண்டுபட்டு துடித்துக் கொண்டிருக்கும் ஒருவரிடம் போய் எனக்கு அதில் பயிற்சி கிடையாது என்று சொல்ல முடியுமா? ஏதாவது செய்து அவர் உயிரைக் காப்பாற்ற வேண்டிய கடமை இருந்தது. ஒருவரையும் திருப்பி அனுப்ப முடியாது. இருக்கிற அறிவையும் உபகரணங்களையும் மருந்தையும் வைத்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்ய முயல்வோம்.

2009 பெப்ரவரி மாதம். புதுமாத்தளன் பாடசாலையில் ஆஸ்பத்திரி ஒன்று தொடங்க முடிவெடுத்தோம். மருத்துவ உபகரணங்கள், மருந்துகள், எக்ஸ்ரே, ஆய்வு வசதி ஒன்றுமே கிடையாது. மிக முக்கியமாக ஜெனரேட்டர் இல்லை. ஆகவே, மின்சாரம் கிடையாது. அப்போது, அந்தக் கர்ப்பிணிப் பெண்ணைக் கொண்டுவந்தார்கள். பிரசவம் ஆகாமல் மூன்று நாள் கடும் அவஸ்தையில் இருந்தார். எப்படியும் சிசுவை வெளியே எடுக்க வேண்டும். எடுக்காவிட்டால் பிள்ளை செத்துவிடும். தாயும் இறந்துவிடுவார்.

சிசேரியன் அறுவை சிகிச்சை செய்வதற்குத் தேவையான உயரமான கட்டில் இல்லை. சாதாரண கட்டிலில் உடலை வைத்துக் குனிந்துதான் செய்ய வேண்டும். உட்கார்ந்து கொண்டும் செய்ய முடியாது. பெண்ணின் இடுப்புக்குக் கீழே விறைக்கும் ஊசியைச் செலுத்திவிட்டுத் துணிந்து அறுவை சிகிச்சை செய்ய முடிவுசெய்தேன். ஒருவர் ரோர்ச் லைற்றை அடித்துப் பிடித்தார். குனிந்த நிலையில் வயிறைக் கிழித்து, கர்ப்பப் பையை வெட்டிச் சிசுவை வெளியே எடுத்தேன். சிறிது தாமதித்தாலும் குழந்தை இறந்திருக்கும்.

நஞ்சுக்கொடியையும் அகற்றிச் சுத்தம் செய்தோம். என் முதுகு தாங்கமுடியாமல் வலித்தது. கர்ப்பப்பையைத் தைத்தபோது இரத்தம் பெருகிக்கொண்டேயிருந்தது. ஊசியும் தெரியவில்லை நூலும் தெரியவில்லை. ஐந்து மணி நேரம் கடந்துவிட்டது. என்ன செய்வது என்று புரியவில்லை. உதவியாளர் ஒருவர் 'ஒரு மடிப்பு விட்டுப்போயிருக்கலாம், தடவிப் பாருங்கள்' என்றார். உண்மைதான் விட்டுப்போன மடிப்பைச் சேர்த்துத் தைத்து இரத்தம் பாய்வதை நிறுத்தினேன். வயிற்றையும் தைத்து முடிக்க 8 மணி நேரம் ஆனது. எட்டு மணி நேரம் குனிந்து வேலை செய்ததால் தாங்க முடியாத முதுகு வலி. தாயையும் சேயையும் காப்பாற்றிய மகிழ்ச்சியில் அது மறைந்துபோனது."

**"போரில் இராணுவம் கொத்துக்குண்டு பாவித்ததா?"**

"இலங்கை ராணுவம் (Cluster Bombs) கொத்துக் குண்டுகள் பாவிப்பதாக செய்திகள் வந்தன. ஏற்கெனவே அவை தடைசெய்யப்பட்டிருந்தன. ஆனால், எங்களிடம் அதற்கான ஆதாரம் கிடையாது. 2009 மே மாதம் போர் முடிவுக்கு வருவதற்கு இன்னும் சில நாள்களே இருந்தன. போர் உச்சத்தில் இருந்த காலம் அது. வழக்கம்போல அன்று காலை விடியும்போதே காயம்பட்டவர்களும் இறந்தவர்களும் நோயாளர்களும் அவர்கள் உறவினர்களும் மருத்துவமனையை நிறைக்கத் தொடங்கிவிட்டனர். ஆஸ்பத்திரி இயங்கியது புளியமரத்தின் கீழ்தான். பாயிலும், வெறும் தரையிலும், பிளாஸ்டிக் விரிப்பிலும் காயம்பட்டவர்கள் கிடந்தார்கள்.

24 மணி நேரமும் ஒரு கூட்டு ஓலம் கிளம்பியபடியே இருந்தது. மருந்துகள் இல்லை உபகரணங்கள் இல்லை, உதவி இல்லை. நூற்றுக்கணக்கானவர்கள் வெளியே வரிசையில் நின்றார்கள். மிகவும் ஆபத்து நிலையில் இருந்தவர்களுக்கு மாத்திரம் சேலைன் கொடுக்கப்பட்டது. அவை புளியமரத்துக் கிளைகளில் தொங்கின. பஞ்சுகூட இல்லை என்றபடியால் வேட்டியையும், சாரத்தையும் கிழித்து புண்களைத் துடைத்துச் சுத்தமாக்கினோம். இறந்துபோன உடல்களும் காயம்பட்ட உடல்களும் ஒரே வரிசையில் கிடந்தன. அறுவைச் சிகிச்சையில் வெட்டப்பட்ட கால்களும், கைகளும் மூலையில் ஒரு பெரிய பிளாஸ்டிக் வாளியில் குவிக்கப்பட்டிருந்தன. அன்று மாலை அவை பிணங்களுடன் புதைக்கப்படும். பார்வைக்கு இறைச்சிக் கடைபோலவே ஆஸ்பத்திரி இருந்தது. தரையில் எப்பவும் இரத்தம் ஓடும். இரத்தத்தில் தோய்ந்து என்னுடைய ஒரே சப்பாத்து உக்கி கிழிந்துவிட்டதால் கடைசி நாள்களில் நான் வெறும் காலுடனேயே நடந்து வேலை பார்த்தேன்.

55 வயது மதிக்கக்கூடியப் பெண்ணைத் தூக்கி வந்தார்கள். பெரிய காயம்பட்டு முழங்கால் சில்லு வெளியே தெரிந்தது. சதைகள் தொங்கி, இரத்தம் ஒழுகியது. அவருடைய புண்ணைச் சுத்தமாக்கச் சொல்லிவிட்டு அடுத்தவரைப் பார்த்தேன். பாதியில் எல்லோரும் வெளியே ஓடினார்கள். மருத்துவர்கள், உதவியாளர்கள், நோயாளர்கள் எல்லோரும் இடித்துப் பிடித்து வெளியேறினார்கள். காரணம், அந்தப் பெண்ணின் முழங்காலுக்குள் ஒரு குண்டு புதைந்துபோய்க் கிடந்ததுதான். ரோர்ச் பற்றரியிலும் பார்க்கக் கொஞ்சம் பெரிய குண்டு. கொத்துக்குண்டிலிருந்து புறப்பட்ட பல குண்டுகளில் ஒன்று அவர் காலுக்குள் ஆழமாகப் புதைந்துவிட்டது. எந்த நேரமும் அது வெடிக்கலாம். அந்த பயத்தில் ஆள்களெல்லாம் வெளியேறி விட்டார்கள். காயம்பட்ட பெண்ணுக்கு விசயம் தெரியாது. அவர் கத்தியபடியே கிடந்தார். தெரிந்தாலும் எங்கே ஓடுவது? அவர்தானே குண்டு.

வெளியே நானும் மற்ற மருத்துவர்களும் கூடி ஆலோசித்தோம். முதல் தடவையாக இராணுவம் கொத்துக்குண்டு பாவித்திருப்பதற்கான தடயம் எங்களுக்குக் கிடைத்திருந்தது. மருத்துவர்கள் பயத்தை வெளியே காட்டினால் மருத்துவமனையை மூடவேண்டி வரும். அறுவைச் சிகிச்சை மூலம் குண்டை அகற்றுவது முடியாத காரியம். எந்த நேரமும் குண்டு வெடிக்கலாம். அப்போது நோயாளியுடன் மருத்துவரும் இறந்துபோவார். 17 வயது இளம்பெண் ஒருவர்தான் ஆலோசனை சொன்னார். தொடைக்குக் கீழே, முழங்காலுக்கு மேலே அவருடைய காலை மெதுவாக அதிர்ச்சி தராமல் கம்பி வாளால் அறுத்தோம். வெட்டிய காலை வண்டியில் வைத்துத் தள்ளிச் சென்று தூ ரத்தில் புதைத்தோம். அந்தப் பெண்மணியின் உயிரைக் காப்பாற்றியது பெரிய சாதனையாக அமைந்தது. அவர் சுகமாக இருக்கிறார் என்ற செய்தி சமீபத்தில் எனக்குக் கிடைத்திருக்கிறது."

**"உங்களுக்குச் சவால் கொடுத்த சம்பவங்கள் ஏதாவது இருக்கின்றனவா?"**

"மருத்துவ வாழ்க்கை முழுக்கச் சவால்தான். எல்லா அறுவை சிகிச்சைகளும் வெற்றியிலேயே முடிந்தன என்று சொல்ல முடியாது. ஆகக் குறைந்த வசதிகள், ஆகக் குறைந்த உபகரணங்கள் ஆகக் குறைந்த மருந்துகள் இவற்றை வைத்துக்கொண்டு சமாளித்ததுதான் பெரிய விசயம். ஒரு நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணை கொண்டுவந்தார்கள். அதைப்போல ஒரு காட்சியை நான் என் மருத்துவ வாழ்க்கையில் கண்டது கிடையாது. குண்டு, வயிற்றைத் துளைத்துப் பின்னர் கர்ப்பப்பையையும் துளைத்து வெளியேறியிருந்தது. குழந்தையின் கை, குண்டுத்துளை வழியாக வெளியே வந்துவிட்டது. நச்சுக்கொடியும் துவாரத்திலிருந்து வழிந்தது. குழந்தையில் குண்டு பட்டிருந்ததால் அது இறந்துவிட்டது. தாயைக் காப்பாற்றலாம் என்று பார்த்தால், அவருடைய உடலில் பல பாகங்கள் சிதைந்துபோயிருந்தன. அவரையும் காப்பாற்ற முடியவில்லை."

**"புலிகளுடன் உங்கள் உறவு எப்படி இருந்தது?"**

"மருத்துவ ரீதியாக அவ்வப்போது உதவினார்கள். போர்முகத்தில் நான் வேலை செய்ததால், பல விநோதமான சம்பவங்கள் நேர்ந்தன. ஒரு நாளைக்கு 200 பேரைப் பார்க்க வேண்டும். 18 மணி நேரம் தொடர்ந்து வேலை செய்தாலும் முடிவுக்கு வருவதில்லை. யுத்த வலயத்தில் 3,00,000 பேர் சிக்கியிருந்தார்கள். ஆனால், 80,000 பேர்தான் என அரசாங்கம் ஊடகங்களுக்குத் தொடர்ந்து அறிவித்தது. 2,20,000 ஆள்கள் அழிந்தாலும் கணக்குக் காட்ட வேண்டிய அவசியம் கிடையாது. ஆஸ்பத்திரியில் நாங்கள் நோயாளர்களின் விவரங்களைக் கடைசி நாள் வரை பதிவுசெய்யத் தவறவில்லை.

அதிகாலை நேரம் ஒரு பெண்ணைக் கொண்டுவந்து இறக்கினார்கள். நடு இரவு பங்கரிலிருந்து வெளியே சிறுநீர் கழிக்கப் போயிருக்கிறார். அந்த நேரம் RPG (Rocket Propelled Grenade) அதாவது, நுனியில் குண்டு பொருத்திய ரொக்கட் ஆகாயத்திலிருந்து கீழிறங்கி அவருடைய ஒரு தொடையைத் துளைத்து மற்றொரு காலையும் துளைத்து வெளியேறமுடியாமல் அப்படியே நின்றுவிட்டது. அதிர்ஷ்டவசமாகக் குண்டு வெடிக்கவில்லை. ஏவுகணையின் நுனியில் பொருத்தியிருந்த குண்டு எந்த நேரமும் வெடிக்கலாம். ரொக்கெட்டை நடுவே வெட்டி இரண்டு பக்கமும் உருவி எடுத்துவிட்டுத்தான் சிகிச்சையை மேற்கொள்ளலாம். ஆனால், முதலில் குண்டைச் செயலிழக்கச் செய்ய வேண்டும். புலி வீரர் ஒருவர், செய்தி கேட்டு எங்கேயோ இருந்து வந்து, குண்டைச் செயலிழக்க வைத்தார். அதன் பின்னர்தான் நாங்கள் சிகிச்சையை ஆரம்பிக்க முடிந்தது. பெண்ணும் மரணத்திலிருந்து தப்பினார்."

(18ஆம் பக்கம் பார்க்க)

சந்திரவதனா

# கலை வளர்க்கும் பூனைகள்

மண்டபம் நிறைந்திருந்தது. மேடையில் பரதம் நர்த்தன மாடியது. இளவட்டங்கள் கதிரைகளில் இருக்காமல் மண்டபத்தின் சுவரோரமாக நின்று நர்த்தனத்தையோ அல்லது நர்த்தகிகளையோ ரசித்துக் கொண்டிருந்தார்கள். சிறுவர்கள் இருக்கைகளை விட்டெழுந்து அங்குமிங்குமாக ஓடிக் கொண்டு திரிந்தார்கள்.

சுந்தரேசர் இந்தக் களேபரங்களுக்குள் மண்டபத்துள் அடங்கிப் போய் விடாமல் வெளியிலே நின்றார். அவர் அப்பிடித்தான். மண்டபத்துள் மனைவியின் அருகில் உட்கார்ந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பதை விட வெளியில் பெரிய மனுசத் தோரணையுடன் கன்ரீனிலோ... கசட் விற்கும் இடங்களிலோ... நின்றால்தான் நடனமாடி விட்டுப் போகும் பெண்களுடனோ அல்லது வெளியில் கன்ரீனில் சிற்றுண்டி வாங்க வரும் பெண்களுடனோ இரண்டு பகிடி விட்டுச் சிரிக்கலாம் என்பது அவருக்கு நன்கு தெரியும்.

அவர் இந்த விடயத்தில் படுகில்லாடி. இதொன்றும் அவரது மனைவி கோமதிக்குத் தெரியாமலில்லை. இளவயதிலேயே அவர் சபல புத்திக்காரன்தான். கிளி மாதிரி அழகிய மனைவி கோமதியைப் பக்கத்தில் வைத்து விட்டுக் காகங்களைத் தேடிப் போய் வருவதில் அவருக்கு அலாதித் திருப்தி. இளமையில்தான் அப்படியென்றால் இப்போ வயசு ஐம்பதைத் தொட்ட பின்னும் நரைத்த மீசையை மளிச்சு விட்டுக் கொண்டு அலையோ அலை என்று அவர் அலைவதைப் பார்க்க கோமதிக்குப் பொல்லாத எரிச்சல் வரும்.

கோமதி சில சமயங்களில் மனசு பொறுக்காமல் "கலியாண வயசிலை பிள்ளையளை வைச்சுக் கொண்டு என்னப்பா கூத்தடிக்கிறிங்கள்..! கொஞ்சம் கூட வெக்கமாயில்லையோ உங்களுக்கு..?" என்று பேசுவாள்.

"உனக்கு விசரடி! நான் ஒண்டும் நீ நினைக்கிற மாதிரி நடக்கேல்லை..!" என்று கத்தி விட்டு, அவர் தன் வேலையை அலுக்காமல் சலிக்காமல் ஒவ்வொரு தமிழ் நிகழ்ச்சிகளிலும் தொடருவார். தன்ரை வயசுக்கு தன்னை யாரும் சந்தேகப்பட மாட்டார்கள் என்பதில் அவருக்கு அபார நம்பிக்கை.

அவரின் கெட்டித்தனம் என்னவென்றால் யார் யாருக்கெல்லாம் பருவ வயதில் பெண் பிள்ளைகள் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் தனக்கு நட்பாக்கி விடுவார். அவர்களிடம் 'அண்ணை நீங்கள்தான் எல்லாம்" என்பது மாதிரி நடந்து கொள்வார். அவர்கள் தன்னை விட வயதில் குறைந்தவர்களாக இருந்தாலும் ஒரு அண்ணை போட்டு, பணிவு காட்டி மடக்கி விடுவார்.



அடுத்தது, புதிதாகத் திருமணத்துக்கென யாருக்காவது பெண் தொதால் போதும். ஏதாவதொன்றைச் சாட்டிக் கொண்டு எடுத்ததுக்கெல்லாம் அவர்கள் வீட்டுக்குத்தான் ஓடுவார். போயிருந்து அந்த வீட்டுப் பெண்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருப்பதில் அவருக்கு அளவுக்கதிகமான ஆர்வம். அதற்காகவே அழகான பெண்கள், இளம் மனைவியர் இருக்கிற வீட்டு ஆண்களுடன் எல்லாம் அருமையான நண்பன் போல அழகாக நடிப்பார். அந்தப் பெண்களின் கண்களுக்கு அவர்கள் கணவன்மார்களை விடத் தான்தான் அழகாகத் தெரிவேன் என்பது அவரது முழுநம்பிக்கையும். அவருக்குத் தன்னம்பிக்கை மிக அதிகம்.

இன்றும் கோமதி தனியேதான் இருந்து நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நினைவுகள் மட்டும் சுந்தரேசரோடு வெளியே நின்றன.

இம்முறை நிகழ்ச்சிக்கான மண்டபமும் அதற்குரிய கன்ரீனும் சுந்தரேசருக்கு மிகவும் வசதியாகவே அமைந்து விட்டது. வழமையான மண்டபங்களைப் போல் வெளியாக இல்லாமல் கன்ரீனும் ஒரு அறையினுள். அதை அறையென்று சொல்வதை விட இருந்து சாப்பிடுவதற்கான இடமும் சேர்த்து பெரிதாகக் கட்டப்பட்டிருந்ததால், ஹோல் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். அந்த ஹோலின் ஒரு மூலையை சேலைகளாலும் திரைச்சீலைகளாலும் மூடி மறைத்துத்தான் நிகழ்ச்சி தரும் பெண்கள் உடை மாற்றுவதற்கான அறை தற்காலிகமாகத் தயாரிக்கப்பட்டி ருந்தது. கன்ரீனைக் கடந்துதான் அந்தத் தற்காலிக அறைக்குப் போக வேண்டும். இது போதும்தானே அவருக்கு.

ஒரேயடியாகக் கன்ரீனுக்குள் போய் பெரிய மனுசத் தோரணையுடன் ஒரு கரையாக இருந்து கதையளந்து கொண்டிருந்தார். கண்கள் மட்டும் இளம் பெண்களின் கண்களைச் சந்திப்பதிலேயே குறியாக இருந்தன. சுந்தரேசரின் வயதுக்கு யாரும் அவரைத் தப்பாக நினைக்க மாட்டார்கள். யாராவது இளம்பெடியள் கன்ரீனுக்குள் வந்தால்தான் கண்கொத்திப் பாம்பாய் நின்று காவல் காப்பார்கள். இது சுந்தரேசர் போன்ற பூனைகளுக்கு வலு வசதி.

ரீன்ஏஜ்ஜில் காலடி வைக்கும் பெண் பிள்ளைகளின் பலவீனம் அவருக்கு நன்கு தெரியும். அதனால் அவர் அந்தப் பிள்ளைகளைக் கண்களால் தூண்டில் போட்டு சுலபமாக மடக்கி விடுவார். அதன் பின் அங்கிள் அங்கிள் என்று கொண்டு அந்தப் பிள்ளைகள் அவர் பின்னால் திரிவார்கள். ரீன்ஏஜ்ஜில் இருந்து வெளியே போகப் போகும் பெண் பிள்ளைகளுடன் இன்னொரு விதமான அணுகு முறை. திருமணமான இளம்பெண்கள் என்றால் கணவன்மாருக்கு எந்த வித சந்தேகமும் ஏற்படாத வகையில் வேறொரு விதமான அணுகுமுறை.

திருமணமான பெண்களின் முன், பெண்கள் கஷ்டப்பட்டாலே அவருக்கு மனசு தாங்காது என்பது போல அவர் நடத்தும் நாடகங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. வீட்டில் கோமதியையே எல்லா வேலைகளையும் செய்ய விட்டு விட்டு ஊர் சுற்றும் அவர், மற்றைய பெண்களின் கணவன்மாருக்கு, பெண்டாட்டிக்கு உதவிகள் செய்யும்படி புத்திமதி சொல்வார். இதனால் இதெல்லாம் அவரது நடிப்பு என்று தெரியாமலே அந்தப் பெண்கள் இவர் மேல் மதிப்பும் பிரியமும் வைத்து விடுவார்கள்.

மொத்தத்தில் அவர் உலகமறிந்த, உளவியல் புத்தகங்கள் எல்லாம் வாசித்து பெண்களின் பலவீனங்களைக் கற்றறிந்த புத்திசாலித்தனமான பூனை. கோமதிக்கு வெளியில் சொல்லவும் முடியாத மெல்லவும் முடியாத் அவஸ்தை. எல்லாவற்றையும் விட்டிட்டு எங்காவது ஓடி விடுவோமா என்ற எரிச்சலான எண்ணம் அவளுள் அடிக்கடி எழும். ஆனால் ஓடிப் போனால் சுந்தரேசர் கதையை எப்படித் திருப்புவார் என்பதும் அவளுக்குத் தெரியும். சுந்தரேசர் சொல்வதைத்தான் ஊர் நம்பும்.

கோமதி வெளிநாட்டு மோகத்தில் கலாசாரம், பண்பாடு எல்லாவற்றையும் காற்றில் வீசி விட்டு ஓடி விட்டாள் என்றுதான் சமூகம் சொல்லும். அதனால் புயல் வீசும் மனசைப் பொறுமையால் காத்தாள். கோமதியின் இந்த ஊர் உலகத்துக்குப் பயந்த தன்மை கூட சுந்தரேசருக்குச் சாதகமாகவே அமைந்து விட்டது. கோமதி மன உளைச்சலுடன் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் திரை மூடப்பட்டு "15 நிமிட இடைவேளை" அறிவிக்கப் பட்டது. எழுந்து வெளியில் போனாள். கன்ரீனுள் அவளுக்கு முன்னமே வெளியில் போய் விட்ட பெண்களும், ஆண்களும் குவிந்து நின்றார்கள். ஏதாவது குடிக்க வேண்டும் போலிருந்ததால் கோமதியும் கும்பலோடு கும்பலாக கன்ரீன் முன் நின்றாள்.

சுந்தரேசர் இவளைக் கவனியாது மிகவும் சந்தோசமாக பிரசங்கம் வைத்துக் கொண்டிருந்தார். "எங்கடை கலையும் கலாசாரமும் அழியாமல் இருக்கோணுமெண்டால் நாங்கள் அடிக்கடி கலை நிகழ்ச்சிகள் வைக்க வேணும். எங்கடை கலையையும் கலாசாரத்தையும் வளர்க்க வேண்டியது தமிழர்களாகிய எங்களின்ரை கடமை... இந்த நிகழ்ச்சியோடை நாங்கள் ஓய்ந்து போகக் கூடாது. முந்தி மாதிரி இப்பவெல்லாம் தமிழ் நிகழ்சிகளுக்கு வாற ஆக்களின்ரை தொகை குறைஞ்சு போட்டுதெண்டாலும் நாங்கள் ஓய்ந்து போகக் கூடாது. எங்கடை கலையை அழிய விடக்கூடாது. அடுத்த மாதம் அந்த நகரத்திலை.. அதற்கடுத்த மாதம் மற்றைய நகரத்திலை... எண்டு எல்லா இடங்களிலையும் நடத்தோணும். உங்களுக்கு நிகழ்ச்சிகள் கிடைக்கிறது கஷ்டம் எண்டால் என்னட்டைச் சொல்லுங்கோ. நான் டான்ஸ் ரீச்சர்மாரோடை கதைச்சு உங்களுக்கு நிகழ்ச்சி எடுத்துத் தாறன்." கோமதி எட்டிப் பார்த்தாள்.

கொஞ்சப் பேர் வாயைப்பிளந்தபடி அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சுந்தரேசரின் வாய் பேசிக் கொண்டிருக்க, கண்களோ ஒரு டான்ஸ் ரீச்சரையும், பிள்ளைகளையும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. கோமதி ஒரு மாதிரி தண்ணீரை வேண்டிக் கொண்டு வந்து தள்ளி நின்று கூட்டத்தைப் பார்த்தாள்.

(18ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்

# இருக்கையான இலைகள்



இலைகள் இராட்சதஅளவில் இருப்பது வினோதம்தான்! அதை இன்றைய பூங்காவின் தலைப்புப் புதினமாக பார்ப்போம். ஒரு இலை அதிகபட்சம் 65 கிலோ எடையைத் தாங்கும் என்பது புழுகுக் கதையென்று நீங்கள் ஒதுக்கக் கூடும். படத்தைப் பார்த்து நீங்கள் நம்பலாம்.

தென்னமெரிக்காவை தாயகமாகக் கொண்ட இந்த இராட்சத நீர் லில்லி தாவரம் தாய்வானிலும் அறிமுகமாகியுள்ளது. இங்கு வளர்க்கப்பட்டு, 2013இல் இந்த அரிய தாவரத்தை உள்ளடக்கிய கண்காட்சி ஒன்றி இடம்பெற்றது. 2014 இல் இந்த இலை மீது ஒருவர் உட்காரும் பலப்பரீட்சையும் வெற்றிகரமாக நிறைவேறியது.

தாய்வானில் தாவரங்களை நிர்வகிக்கும் நிறுவனத்தின் முகாமையாளர் பிரிவின் இயக்குநரான ஹோ என்பவர், இந்த நீர் லில்லிச் செடியின் இலைகள் மிகப் பலம் வாய்ந்தவை என்பதை வெளிப்படுத்தி இருக்கிறார். ஆனால் எவ்வளவுதான் இலைகள் பலம் வாய்ந்தவையாக இருந்தாலும், இயற்கைச் சீற்றத்தால் இவை துவழ்வதைச் சமாளிப்பது பெரும் சவாலாக இருக்கின்றது என்கிறார்.

அது மாத்திரமல்ல கொட்டும் மழை, மீன்கள், நன்னீர் நத்தைகளின் சீண்டல் எனப் பல எதிரிகளுக்கு முகம் கொடுத்தே இந்தச் செடிகளை வளர்க்க வேண்டி இருக்கின்றது என்கிறார் இவர். அயராத நல்ல கவனிப்பினால் 130 செ.மீ அகலம் கொண்ட இலைகள் பார்ப்போரை ஆச்சரியப்படுத்துகின்றன.

தாய்வானின் தலைநகரான தாய்பேயில் உள்ள விக்ரோறியா பூங்காவில் வளரும் இந்த நீர் லில்லிச் செடியை, வருடத்தில் ஒரு தடவை நேரில் சென்று பார்க்க முடியும். எனினும் அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாகவும், நீர் பற்றாக்குறை காரணமாகவும் , 2019இல் இந்த நிகழ்வு நடப்பது சந்தேகம் என்கிறார் ஓர் அதிகாரி.

இங்கே நடக்கும் இன்னொரு முக்கிய நிகழ்வு என்ன தெரியுமா? இந்த இலைக்கு மேல் வைக்கப்படும் பிளாஸ்ரிக் தட்டின் மீது 60 விநாடிகள் ஒருவர் உட்கார முடியும். இது நல்ல அனுபவம்தான்.

சொல்லி அடிக்கும் லில்லி இலைகள்!



# காணாமல் போய்விடுமா "வெள்ளைக் காண்டாமிருகங்கள்"?

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் ஆயிரக்கணக்கில் திரிந்தவை வெள்ளைக் காண்டாமிருகங்கள். இன்று அழிவின் விளிம்பில் நிற்கின்றன. உலகிலுள்ள 5 இனக் காண்டாமிருகங்களில், இரண்டு இனங்கள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. இதில் ஒரு இனம்தான் "வெள்ளைக் காண்டாமிருகம்.

'இந்த ஆண்டு இந்த இனத்தில் மூன்று மிருகங்களே எஞ்சியிருந்தன. அதில் ஒன்று ஆண். இரண்டு பெண்கள். இந்த வருடம் மார்ச் மாதம், 45 வயதான ஆண் காண்டாமிருகம் , மரணமடைந்து விட்டது. இப்பொழுது எஞ்சியிருப்பது இரண்டே இரண்டு பெண்கள்தான்.

இந்த இனக் காண்டா மிருகத்தின் நிறம் வெள்ளையா என்ற கேள்வி எழுகின்றது. எழுத்துக் கூட்டுவது வேறுபட்டாலும் "அகலமான" என்பதற்கு ஆபிரிக்க மொழியிலும் (wijd) ஆங்கிலத்திலும் "வைற்" என்றே சொல்லப்படுகின்றது. தென்னாபிரிக்காவிற்கு வந்து குடியேறியவர்கள் இந்தச் சொல்லை "வெள்ளை" என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொண்டார்கள். இந்த இனக் காண்டாமிருகத்திற்கு புல் மேய்வதற்கு வசதியாக அகன்ற வாய் இருக்கின்றது. அதுதான் இந்த அகன்ற வாய் கொண்ட இனத்திற்கு கிடைத்த காரணப் பெயர். நிஜத்தில் இந்த இன மிருகங்களின் நிறம் சாம்பல்.

கென்யாவில்தான் இந்தக் காண்டாமிருகங்கள் அதிகம் வாழ்கின்றன. 1970இல் கென்யா 20,000 கறுத்த காண்டாமிருகங்களை வைத்திருப்பதாக அரசு கூறியது. ஆனால் இத் தொகை 98 வீத வீழ்ச்சி கண்டு 1983 இல், 350 ஆகக் குறைந்திருக்கின்றது. இப்பொழுது இத் தொகை 700 ஆக உயர்ந்துள்ளது என்கிறது கென்ய அரசு.

# நகைப்புக்கு இடமளிக்கும் நாட்டின் "முதல் சீமாட்டி"

சர்ச்சைக்கு பிரபல்யமானவர் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்! அவரின் அழகிய இளம் மனைவி மெலனியா பற்றிய சர்ச்சைகளுக்கும் பஞ்சம் இருப்பதில்லை.இவர் அணியும் பொருத்தமற்ற உடைகளுக்காக இணையத்தில் பலரதும் நகைப்புக்கு இவர் ஆளாவது அதிகம்.

இந்தத் தடவை ஒரு ஓக் மரக் கன்றை வெள்ளை மாளிகைத் தோட்டத்தில் நடும் நிகழ்வொன்றில், இவர் அணிந்திருந்த குதிக் காலுயர்ந்த காலணி பலரின் கேலிக்கு உள்ளானது. இந்தக் காலணியின் பெறுமதி ஒரு இலட்சம் ரூபாவைத் தாண்டும். இவர் அணிந்திருந்த நீட்டுப் பாவாடை பல இலட்சம் ரூபாய்கள் பெறுமதியானது. இதையெல்லாம் அணிந்து கொண்டு இவர் நட்ட மரத்திற்கு மண் அள்ளிப் போடுவதைப் பார்க்கும்போது, ஏனையோர் எள்ளி நகையாடும் வண்ணம் தன் தலையில் மண்ணைப் போடுகிறாரோ என்றே நினைக்கத் தோன்றும்.

கீச்சகத்தில் இவரைப் பற்றி நையாண்டியாக பலர் கருத்துக்களை கிளப்பி விட்டிருக்கிறார்கள். "இந்தக் குதியுயர்ந்த காலணி, 8 அங்குல ஆழத்திற்கு மண்ணில் புதையுமே? இவர் எப்படி மண்ணில் நடக்கிறார்?" என்று ஒருவர் கேட்டுள்ளார். " உங்களை எவராவது அலக்காகத் தூக்கிக் கொண்டு வந்து தோட்ட வேலை செய்ய இருத்தினார்களோ?" என்று இன்னொருவர் கேட்டிருக்கிறார்.

அமெரிக்காவின் "முதல் சீமாட்டி" கோமாளித்தனமாக நடந்து கொள்வது இது முதற் தடவையல்ல என்கிறார்கள். இந்த வருடம் ஜூன் மாதம், புலம்பெயர்ந்து அமெரிக்கா வந்த பிள்ளைகளின் முகாம் ஒன்றைப் பார்வையிடச் சென்றபோது, இவர் அணிந்திருந்த மேலங்கி மிக மலிவான ஒன்று என்பதோடு, முதுகுப் பகுதியில் " எனக்கு உண்மையில் அக்கறை இல்லை. உங்களுக்கு இருக்கிறதா?" என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த வாசகம் அமெரிக்காவின் ரெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள இந்த பிள்ளைகள் முகாமுக்கு அமெரிக்காவின் அதிபர் கொடுக்கும் ஒரு முரண்பாடான செய்தி " என்று டெய்லி மெயில் பத்திரிகை அப்பொழுது விமர்சித்திருந்தது.



நாற்றமடிக்கும் பெரிய இடத்து 'சின்னத்தனங்கள்" இவைதானோ?

# நிலத்துக்காக தொடரும் போராட்டம்...!



உங்களுக்கென்று இருக்கும் தொழில், உங்களுடைய வீடு அனைத்தும் திடீரென்று இல்லையென்றால், யாரேனும் அதைக் கைப்பற்றிக் கொண்டால்!

துடித்துப்போவோம் கேட்டுப் பார்ப்போம் - போராடிப் பார்ப்போம் - இருந்தும் நியாயம் கிடைக்கவில்லை என்றால்....? ... கோபம் வரும். கோபம் வந்தும் ஒன்றும் செய்யமுடியாமல் போகும் அந்தக் கையறு நிலையில் என்ன தோன்றும், இதயம் வெடித்துக் கதறி அழத் தோன்றும்.

அப்படித்தானிருக்கிறது இவர்களின் நிலை. இவர்கள் ஆபிரிக்காவிலிருந்து ஈகுவடோருக்குக் குடிபெயர்ந்த விம்பி (Wimbi) என்ற பழங்குடியினம். பழங்குடிகள் என்றால் பல நூற்றாண்டுகள் தங்கள் தாய்நிலத்தைப் பாது காத்து வாழ்பவர்கள்தானே. குடிபெயர்ந்த இவர்கள் எப்படிப் பழங்குடிகளாவார்கள் என்ற கேள்வி எழலாம். நிச்சயமாக இவர்கள் பழங்குடிகள்தாம். 19 ஆம் நூற்றாண்டில் ஆபிரிக்காவிலிருந்து அடிமைத் தொழில் செய்வதற்காகக் கடத்தி வரப்பட்டவர்கள். அடிமைச் சந்தைகளில் விற்கும் மனிதக் கடத்தல் கும்பல்களிடம் சிக்கியதன் மூலமாக ஈக்குவடோருக்குக் குடிபெயர்ந்தவர்கள்.

பிறகு அடிமைத் தளையிலிருந்து தப்பித்து எஸ்மெரால்டஸ் (Esmeraldas) பகுதியிலிருந்த அடர்ந்த காடுகளுக்குள் மறைந்து வாழத்தொடங்கினார்கள். காட்டுக்குள்ளேயே பல ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அடிமைத்தனம் ஒழிக்கப்பட்ட பிறகும்கூட வெளியுலகத்தோடு தொடர்பு வைக்க அவர்கள் தயங்கினார்கள். எஸ்மெரால்டஸ ிலேயே வீடுகள் அமைத்து வாழத் தொடங்கினார்கள். சட்டதிட்டங்களைப் பற்றியெல்லாம் அவர்கள் சிந்திக்கவில்லை. மீண்டும் அடிமைத்தனத்தில் சிக்கிவிடக் கூடாதென்பதே விம்பி இன மக்களின் தலையாய சிந்தனையாக இருந்தது.

இவர்களில் ஒருவர்தான் யெஸெனியா படிலா (Yessenia Padilla). தனது விவசாயப் பயிர்களை யாரோ நாசமாக்குகிறார்கள் என்று கேட்டுத் தலைதெறிக்க ஓடினார். அன்று அவரோடு மேலும் 70 விம்பி இனத்தவர்களும் ஓடினர். ஏனென்றால் அவர்களின் நிலங்களும் நாசமாகிக் கொண்டிருந்தன. கட்டைகள், வெட்டுக் கத்திகள் என்று கண்ணில்பட்டதை எல்லாம் எடுத்துக்கொண்டு கிளம்பினார்கள். அங்கு சென்று பார்த்தபோது அந்தப் பனை எண்ணெய் நிறுவனத்தின் பணியாளர்கள் பெரிய எக்ஸ்கவேட்டர் (Excavator) இயந்திரத்தை வைத்துத் தங்கள் நிலங்களை அழித்துக்கொண்டிருந்தனர். அதற்கு முப்பதுக்கும் மேற்பட்ட பொலிஸார் காவலிருந்தனர். இதைச் செய்துகொண்டிருந்தது எனெர்ஜி அன்ட் பல்மா (Energy & Palma) என்ற பனை எண்ணெய் நிறுவனம்.

பல நாள்களாக உழைத்து உருவாக்கிய பயிர்கள் அவர்களின் கண் முன்னாலேயே அழிந்து கொண்டிருந்தன. அவர்கள் நினைத்திருந்தால் தங்கள் நிலத்தில் நின்றிருந்த நிறுவன ஆட்களை அடித்துத் துவம்சம் செய்திருக்க முடியும். அதைச் செய்யவில்லை. ஆத்திரம் கொண்ட மக்கள் அனைவரையும் வெளியேறுமாறு கோஷமிடவும் போராடவும் தொடங்கினார்கள். மக்களின் போராட்டத்தால் அங்கிருந்த பணியாளர்களும், பொலிஸாரும் கிளம்பிவிட்டனர். அவர்களின் எக்ஸ்க்வேட்டர் இயந்திரத்தை மக்கள் சிறைப்பிடித்தனர். பாழ்படுத்திய நிலத்தை மீண்டும் சரிசெய்து கொடுத்துவிட்டு எடுத்துச் செல்லுமாறு கெடு விதித்தனர். இந்தச் சம்பவம் நடந்தது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம். பின்னர் 2017ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள்.

இந்தச் சம்பவம் விம்பி இன மக்களுக்கும் பனை எண்ணெய் நிறுவனத்துக்கும் இடையே நடந்து வரும் 17 வருடப் போராட்டத்தின் ஒரு துளி மட்டுமே. அது அவர்களின் தாத்தாக்கள் வாழ்ந்த நிலம். அவர்களின் பாட்டன்கள், முப்பாட்டன்களுக்கு அடைக்கலம் தந்த நிலம்.

2000 ஆம் ஆண்டு முதல் எனெர்ஜி அன்ட் பல்மா நிறுவனம் எஸ்மெரால்டஸில் வாழும் விம்பி மக்களின் நிலங்களைச் சிறிது சிறிதாக வாங்கினர். அவர்களே நேரடியாகவோ, அல்லது இடைத் தரகர்களை வைத்தோ, மிரட்டியோ, வன்முறையைப் பிரயோகித்தோ ஏதாவதொரு வகையில் அவர்களின் நிலங்களைத் தங்கள் பனை எண்ணெய் உற்பத்திக்காக வாங்கினார்கள். ஆனால், விம்பி இன மக்கள் சட்டபூர்வமாக நேர்மையாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் நிலத்தை மீட்பதற்காக. ஆனால், நீதிமன்றமும் அவர்களை ஏமாற்றிவிட்டது. 2015 ஆம் ஆண்டு விம்பி மக்கள் போட்ட வழக்குக்குக் கடந்த ஆண்டு வெளியான தீர்ப்பு நிறுவனத்துக்கு ஆதரவாக வந்துவிட்டது.

சான் லோரென்ஸோ (San Lorenzo). அந்த மாவட்டத்தில் ஆபிரிக்கப் பாரம்பரியத்தோடு வாழும் ஈக்குவடோரிய பழங்குடிகளான விம்பி மக்கள் அதன் வடக்கு கிராமமான எஸ்மெரால்டஸில் வாழ்கிறார்கள். அந்நாட்டின் மக்கள் தொகையில் அவர்கள் 7வீதம் உள்ளனர். அதில் 70 வீதத்தினர் இந்தப் பகுதியில்தான் வாழ்கிறார்கள்.

1990களில் அவர்கள் தங்களுக் கான நில உரிமை கேட்டுப் போராடினார்கள். அதுவரை அவர்களுக்கு முறையான நில உரிமைச் சட்டங்கள் விதிக்கப் படவில்லை. 1994 ஆம் ஆண்டு நடந்த விவசாயப் புரட்சி அவர்கள் வாழும் பகுதிகளை 'மூதாதையர்களின் பிரதேசங்கள்" என்று அறிவித்தது. அதன்மூலம் அவர்களுக்கான நில உரிமை நிலைநிறுத்தப்பட்டது. 1998 ஆம் ஆண்டும் அதன்பிறகு 2008 ஆம் ூண்டும் அவர்களின் நிலங்களை ாங்குவதோ விற்பதோ சட்டப் டி செல்லாதென்று அரசியல மப்புச் சட்டத்தில் திருத்தங் ர் செய்யப்பட்டன. அப்படி ருந் தும் அவர்களது நிலங்களை ந்நிறுவனம் அதற்குச் சொந்த ாக்கிக் கொண்டுள்ளது. அ மென்றமும் ஆதரித்துத் த ழங்கியுள்ளது அநீதியின் உச்சம். அந்த மக்களுக்கு அடிப்படை சதிகள் எதையும் அரசாங்கம் ைறையாக வழங்கவில்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)





# தந்திரம்

மிகவும் தந்திரமாகக் காரியங்களைச் சாதிப்பவர்களை "ஆள் பெரிய எம்டன்" என்று சொல்லும் பழக்கம் ஈழத்தமிழர்களிடம் உண்டு. இரண்டாம் உலக யுத்தத்தை ஜேர்மனி ஆரம்பிப்பதற்கு முன்பதாகத் தனது எம்டன் (EMBDEN) போர்க்கப்பலை பிரித்தானிய கடற்படையினர் நிலைகொண்டிருந்த துறைமுகங்களுக்கு உளவு பார்ப்பதற்காக அனுப்பி வைத்தது. 1935 ஆம் ஆண்டு திருகோணமலைத் துறைமுகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் எம்டன் வந்து சென்றது. மிகவும் வலிமை வாய்ந்த பிரித்தானியக் கடற்படையினரின் கண்களில் மண்ணைத் தூவிச் சென்ற அக்கப்பலின் பெயரே தந்திர சாலிகளின் உவமைப் பெயராக இன்றளவும் எம்மிடையே நீடிக்கின்றது. (நங்கூரம் வைகாசி - ஆனி 2012)

• • •

வட்டிக்கடைக்காரரிடம் பணம் வாங்கிய ஒருவர் பணத்தைத் திருப்பித் தர முடியாமற் போகவே அந்த வட்டிக்கடைக்காரன் கடன் வாங்கியவரை ஏமாற்ற முடிவு செய்தான். "ஊரார் மத்தியில் ஒரு பையில் கறுப்புக் கல்லையும், வெள்ளைக் கல்லையும் போடுவேன். பையிலிருந்து இரண்டில் ஒரு கல்லை உன் மகள் எடுக்க வேண்டும். கறுப்புக் கல்லை எடுத்தால் உன் மகளை நான் திருமணம் செய்து கொள்வேன். வெள்ளைக் கல்லை எடுத்தால் நீ பணத்தைத் தரவேண்டாம். பெண்ணையும் கட்டித் தரவேண்டாம்" என்று கூறியிருக்கிறார். அதை நம்பிய அந்தக் கடன் வாங்கியவர் "சரி அப்படியே செய்யுங்கள்" என்றிருக்கிறார்.

ஒரு குறிப்பிட்ட நாளில் ஊருக்கு மத்தியில் எல்லோரும் கூடி நின்றனர். பை ஒன்றில் யாரும் அறியாதவண்ணம் இரண்டு கறுப்புக் கற்களை அந்த வட்டிக்காரன் போட்டான். அதனை அந்தக் கடன் வாங்கியவரின் மகள் பார்த்துவிட்டாள். பையிலிருந்து கல்லை எடுத்தவுடன் யாரும் பார்க்கும் முன்பு மின்னல் வேகத்தில் அதைத் தூரமாக எறிந்துவிட்டாள். "நான் பதற்றத்தில் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டேன். பையில் உள்ள கல்லைப் பாருங்கள்" எனச் சொன்னதும் பையில் கறுப்புக் கல் இருக்கவே "அப்போது நான் எடுத்தது வெள்ளைக் கல்" எனக் கூறித் தனது குடும்பத்தினை அந்தப் பெண் காப்பாற்றினாள் - இராஜேஸ் லக்கானி (தமிழகத் தேர்தல் அதிகாரி) ஜூனியர் விகடன் பக்கம் 24,25 - 16.03.2018. தேர்தல் விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சி. சென்னை பட்டாபிராம் - இந்துக் கல்லூரியில் நடைபெற்ற போது அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ஆற்றிய உரையில் குறிப்பிட்ட கதை.

"எந்தத் தந்திரசாலியையும் மடையனாக்குவதற்கு ஒரு பெண்ணிருந்தால் போதும்." - சாண்டில்யன் (சேரன் செல்வி)

• • •

பெர்னாட்ஷா ஓர் ஓவியரிடம் தனது படத்தை வரைந்து தந்தால் 100 பவுண்ஸ் தருவதாகச் சொன்னார். ஓவியர் தத்ரூபமாக வரைந்து கொடுத்தார். ஷா மகிழ்சியுடன் 100 பவுண்ஸுகளையும் 20 பவுண்ட் வீதம் 5 காசோலைகளாகப் பிரித்து எழுதி அத்துடன் ஒரு பாராட்டுக் கடிதத்தினையும் இணைத்து ஓவியரிடம் கொடுத்தார். "ஐயா ஐந்து காசோலைகளாக ஏன் தருகிறீர்கள்? ஒரு காசோலையாகத் தரக் கூடாதா?" என்று ஓவியர் கேட்டார்.


"இந்தக் காசோலைகளை மாற்ற வேண்டாம். இப்போது எனது கையெழுத்துக்காக நான் 30 பவுண்ஸுகளை வாங்குகிறேன். என் கையெழுத்துள்ள இந்தக் காசோலைகளை தனித்தனியாக விற்றால் உனக்கு 150 பவுண்ஸுகள் கிடைக்கும். அதில் 50 பவுண்ஸுகள் அதிக லாபம் உனக்குக் கிடைக்கும். அதோடு எனக்கும் அது லாபம்" என்றார் ஷா.

"உங்களுக்கு எப்படி அது லாபம்" என்று கேட்டார் ஓவியர். "என் கையெழுத்துள்ள காசோலையை யாரும் மாற்றப்போவதில்லை. அவற்றைப் பொக்கிஷமாகப் பாதுகாப்பார்கள். அதனால் வங்கியில் என் பணம் அப்படியே இருக்கும்" என்றார் ஷா. - மல்லிகா அன்பழகன் - சென்னை ( தினமணி சிறுவர் மணி - பக்கம் 3 - 02.05.2013 )

• • •

எத்தனுக்கு எத்தன் எப்படி யோசிப்பான்?

அந்தக் காலத்தில் பிரிட்டனில் யாராவது இறந்தால் உறவினர்களும், நண்பர்களும் சவப்பெட்டியில் (மொய்க் காசு போல) நாணயத்தாள்களைப் போட்டுப்



புதைப்பார்கள். அப்படி ஒரு சாவில் "எல்லோரும் காசு போடுங்கள். கடைசியாக நீங்கள் எல்லோரும் போட்ட அளவிற்கு நான் காசு போடுகிறேன்" என்றான் ஒருவன். அனைத்து உறவினர்களும் போட்டதில் மொத்தம் 1000 பவுண்ஸுகள் தேறியது. அந்த 1000 பவுண்ட்ஸுகளையும் எடுத்துக் கொண்டு "என் பங்காக 1000 பவுண்ட்ஸ் மொத்தம் 2000 பவுண்ட்ஸுகளை நான் போடுகிறேன்" என்று ஒரு காசோலையில் 2000 புவண்ஸுகளை எழுதி அதனைச் சவப்பெட்டியில் போட்டு மூடிவிட்டான் இவன். எத்தனுக்கு எத்தன் இப்படித்தான் யோசிப்பான். - ரகோத்மன் (ஆனந்த விகடன் - 29.01.2014 - நானே கேள்வி நானே பதில்)

• • •

கொஞ்சம் பழைய கதைதான். இன்றைய ஈழச் சூழலுக்கு ஏற்றவாறு கொஞ்சம் உல்டா பண்ணப்பட்டுள்ளது. இதில் கதாநாயகன் விழிப்புலனற்றவன். தினமும் கடவுளை மனமுருக வேண்டுவான். கடவுளும் இவனது வழிபாட்டுக்கு மனமிரங்குவார். மனிதனிடம் உனது ஆசை என்ன என்று கேட்டால் அன்று முழுவதும் வேறு எவருக்கும் வேறு எவருக்கும் அருள்புரிய முடியாது அனுமாரின் வால்போல் மனிதன் தனது ஆசைகளை நீட்டிக் கொண்டிருப்பான். எனவே ஒரோயொரு வரம் மட்டும் இவனுக்கு அளிப்போம் எனத் தீர்மானித்தபோது கடவுளின் குரல் இவனுக்குக் கேட்டது.

"மகனே! உனது பக்தியை மெச்சினேன். உனக்காக ஒரேயொரு வரம் மட்டும் அளிக்கிறேன். பத்து செக்கன்கள் அவகாசம் உனக்கு அளிக்கிறேன். அதற்குள் எல்லாவற்றையும் விட இதுதான் முக்கியம் எனக் கருதும் ஒரேயொரு ஆசையை மட்டும் சொல்லு" என்றார் கடவுள். இவனது மூளை சுறுசுறுப்பானது. கண்பார்வை மட்டும் வேண்டும் என்று கேட்டால் இனி உழைத்துத்தான் வாழவேண்டும். மனைவி மட்டும் வேண்டும் என்று கேட்டால் இனி வேறு வரம் கிடைக்காது. இப்போது பெண் கேட்டுப்போனால் மாப்பிள்ளை என்ன வேலை என்று கேட்பதில்லை. எந்த நாடு என்னுதான் கேட்கிறார்கள். பணம் மட்டும் வேண்டும் என்று கேட்டால் யாராவது தன்னை ஏமாற்றிவிட்டு அதைக் கொண்டு போய்விடுவார்கள். தனது இனிஷியலைப்போடத் தனக்குப் பிள்ளைகள் வேண்டும். அது ஆணா, பெண்ணா என்பதுவும் பிரச்சினை. சொல்லுவோமா? விடுவோமா? எனக் குழம்பும் இளைய தலைமுறையினர் போல அவன் இருக்கவில்லை. உடனே சொல்லிவிட்டான் கடவுளிடம். "ஆண் - பெண்ணான எனது இரட்டைக் குழந்தைகளுக்கு எனது மாடி வீட்டில் வைத்துத் தங்கக் கிண்ணத்தில் குழைத்த சாப்பாட்டை என் மனைவி ஊட்டுவதை நான் என் இரு கண்களால் பார்த்து மனம் குளிர வேண்டும்." என்ற அவனது அசத்தலான வேண்டுகோளைக் கேட்டுக் கடவுளே ஒரு கணம் அசந்து விட்டார். கண்பார்வை, மனைவி, பிள்ளைகள், செல்வம் என்று அனைத்தையும் ஒரே ஆசையில் சொல்லிவிட்டானே என்று. "அப்படியே தந்தேன்" என்றார் அவர்.

பார்வை கிடைத்ததும் எதிரேயுள்ள கடவுளைக் கண்டு வணங்கினான் இவன். "நான் ஒரேயொரு மிஸ்டேக் பண்ணிவிட்டேன். நான் உன்னை பில்கேட்ஸ்ஸுக்கு முன்னால் படைத்திருக்க வேண்டும்" எனப் புன்னகையுடன் கூறிவிட்டு மறைந்து விட்டார் கடவுள்.

பில்கேட்ஸின் நிறுவனத்துக்குப் பணியாளர்களை நியமிக்க வேண்டி வந்தது. நேர்முகத்தேர்வு நடத்துபவர்களிடம் பில்கேட்ஸ் சொன்னாராம் "சோம்பேறிகளைத் தேர்ந்தெடுங்கள். அவர்கள்தான் இலகுவான வழிகளைக் கண்டுபிடிப்பாளர்கள்" என்று. அதனால்தான் கடவுள் அப்படிக் கூறினாரோ?

# மழைக் காலத்துப் புரட்சிப் பூக்கள்



வீழ்ந்தவர்கள் நினைவுடன்
தாய்நிலமெங்கும் பூக்கும்
சிவப்பு மஞ்சள் கலந்த மலர்கள்
போவோர் வருவோர் பார்க்கும்
பூக்களின் வடிவில்
பல முகங்கள் தெரியும்

வீசும் தென்றலில்
ஆடும் மலர்கள்
மண்ணை நேசிக்கும்
உயர்ந்த மலர்கள்
இலட்சியத்துக்காய்
வித்தாகி புதைந்து
மீண்டும் செடியாய்
முளைத்து பூத்த மலர்கள்
சுதந்திர தாகம் கொண்டு -
மலரும்

உண்மையான புரட்சிப் பூக்கள்
ஒவ்வொரு பூக்களும்
வரலாறு சொல்லும்
விலை போகாத
தாயகப் பூக்கள்

மழைக்காலத்தில்
கண்சிமிட்டும்
மென்மையான பூக்கள்
அநீதியை எதிர்க்கும்
கிளர்ச்சிப் பூக்கள்
பூக்களின் முகிழ்வில்
தேசம் மலரும்
அந்த பூக்களுக்குள்ளே
ஒரு தாகம் இருக்கும்....

- ஆ.முல்லைதிவ்யன்

## கதைவெளிச்....

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிந்தனையை வளர்த்தெடுத்ததில் மரபுப் போராட்டத்தின் வகிபங்கை மறுக்கமுடியாது. ஒரு பிரதேசத்தின் பேச்சுவழக்குச் சொற்களால் மட்டும் உருவான படைப்பு அனைத்துத் தரப்பாலும் புரிந்து கொள்வற்கு கடினமாக இருப்பது இத்தகைய படைப்புக்களின் குறைபாடாகச் சுட்டிக்காட்டப்பட்டாலும் கதாமாந்தர்களை உயிரோட்டமுள்ளதாகச் சித்திரிப்பதற்கு அதுவே படைப்பாளியின் பலமாகவும் கருதப்படுகின்றது.

அந்தவகையில் ஆவணி மாதம் வெளிவந்த 'ஜீவநதி' சஞ்சிகையில் உடுவில் அரவிந்தன் எழுதிய 'விலாசம்' என்ற கதையைப் படித்த பொழுது அதில் வந்த 'குதியன் குத்தியவர்கள்' என்றதொரு சொல் மனதை ஈர்த்தது. கதையில் அந்தச்சொல் 'அவனிடம் தாராளமாகப் பணமிருந்தபோது தேடி வந்து குதியன் குத்தியவர்களும் காலப்போக்கில் வராமல் நின்று விட்டார்கள்' என்று சித்திரிக்கப்பட்டிருக்கும்.

கதையின் ஓட்டத்தில் இந்தச் சொல் கொண்டாட்ட மனநிலை எனும் அர்த்தத்தில் பாவிக்கப்பட்டதை என்னளவில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தாலும் கைவசம் இருந்த 'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில்' அதற்கான பொருள் இருக்கிறதா எனத் தேடிப் பார்த்த பொழுது அதில் அச்சொல் இடம்பெறவில்லை. பின்னர் இணையத்தில் தேடிய பொழுது 'ஈழத்து முற்றம்' என்ற பகுதியில் மேற்படி சொல்லுக்கு கீழ்வரும் சில உதாரணங்கள் பதிலாக அளிக்கப்பட்டுள்ளன.

யாராவது நண்பர்கள் வந்து உருப்படியா ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்து அலட்டினால் அல்லது விளையாடிக் கொண்டிருக்கும் போது யாரும் கூப்பிட்டு என்னவும் வேலை செய்யச் சொல்லி அதைச் செய்யாமல் விட்டால் அதுக்குப் பேச்சு அல்லது அடி விழும்பொழுது சும்மா எந்த நேரமும் 'குதியம் குத்திக்கொண்டிருக்கிறது' சொல்வழி கேட்கிறேல்ல என்று சொல்லுவினம்.

அல்லது 'குதியம் குத்தினது' காணும் முகத்தை கழுவிட்டு படியுங்கோ என்றும் கூறுவார்கள். அதேமாதிரி ஒழுங்காப் படிச்சும் பரீட்சையில கோட்டை விட்டால் 'குதியம் குத்துற' நேரத்தில ஒழுங்காப் படிச்சிருக்கலாம் என்பார்கள். அதேநேரம் 'குதியம் குத்துதல்' என்பதற்கு திமிதம் போடுதல் என்றொரு பொருளும் இருப்பதாக அறிய முடிகின்றது.

## கலை...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சி தரும் பிள்ளைகளை விட்டால் இளம்பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்ள மிகவும் சொற்பமானவர்களே நின்றார்கள். மிச்சமெல்லாம் வயது வந்தவர்கள்.

கலை வளர்ப்பும் கலாசார விழாவும் யாருக்காக நடக்கிறது. சுந்தரேசர் போன்ற.. பூனைகளுக்காகவா...? எழுந்த கேள்வியோடு மீண்டும் தன் இருக்கைக்கு நகர்ந்தாள்.

## நிலத்துக்காக...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்கப் போவதாக ஆசைகாட்டியுள்ளது எனெர்ஜி அன்ட் பல்மா நிறுவனம். அதுவும் நேரடியாக அவர்களே ஆசைகாட்டவில்லை. இடைத்தரகர்களின் மூலமாக. அம்மக்களுக்கு அவர்கள் உறுதியளித்ததற்கான ஆதாரங்களே இல்லை. இறுதியில் பெரும்பாலான மக்களிடமிருந்து ஒரு ஹெக்ரெயர் நிலத்தை வெறும் 15, 20 டொலர்களுக்கு என்று வாங்கியுள்ளார்கள். விம்பி இன மக்களின் 30,000 ஹெக்ரெயர் நிலப்பகுதியை இதுவரை வாங்கியுள்ளார்கள். அனைத்தும் சட்டபூர்வமாக நிறுவனத்தின் பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டது. இது தெரியவரவே எதிர்வினையாகப் பல எதிர்ப்புகள் கிளம்பத் தொடங்கின.

எதிர்ப்பவர்கள் தவிர்க்கப்பட்டனர் அல்லது அழிக்கப்பட்டனர். (இன்றும் தொடர்கிறது) காலப் போக்கில் அங்கு வன்முறைக் கும்பல்களை இறக்கி மக்களை மிரட்டிப் பிடுங்கத் தொடங்கினார்கள். சான் லொரென்ஸோவில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டு பொலிஸார் குவிக்கப்பட்டனர். இந்தப் பிரச்சினை தொடர்பாகப் பேசிக் கொண்டிருந்த மூன்று முக்கிய பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டனர். பிரச்சினை அதிகமான பிறகுதான் அது சர்வதேச அளவில் வெளியாகத் தொடங்கியிருக்கிறது. ஆனால், இது பல வருடங்களாக நாங்கள் அனுபவித்து வருவதே என்கிறார்கள் உள்ளூர்வாசிகள்.

பனை எண்ணெய் உற்பத்தி நாட்டின் பொருளாதாரத்துக்கு முக்கியமென்பதால் அதில் முதலீடுகளை 1200 கோடி அதிகப்படுத்தியுள்ளது அரசாங்கம். பனை எண்ணெய் தொழிற்சாலைகளுக்கு வரிச் சலுகைகளும் வரி விலக்குகளும் வழங்கப்படுகின்றன.

தென்னமெரிக்காவில் பனை எண்ணெய் உற்பத்தி செய்வதில் இரண்டாவது பெரிய நாடு ஈக்குவடோர் அதனால், அத்தொழிற்சாலைகளுக்கு அந்த அரசு அதிக சலுகைகளை வழங்குகிறது. அதில் 45 வீதம் சான் லொரென்ஸோவில்தான் உற்பத்தியாகிறது. அங்கு அதிக மக்களுக்கு அவர்கள் வேலைவாய்ப்பு வழங்குவதாகவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாகவும் பேசுகிறார்கள். ஆனால், அங்கு வறுமைக்கோட்டுக்குக் கீழே 85வீத மக்கள் வாழ்கிறார்கள். நாட்டின் மொத்த மக்கள் தொகையில்கூட வறுமைக்கோட்டுக்குக் கீழிருப்பவர்கள் 51 வீதம் பேர். அதைவிடவே சான் லொரென்ஸோவில் அதிகம். அங்கு 23 வீதமான மக்களுக்கே மின்சக்தி வசதி, தண்ணீர் வசதி, கழிப்பறை மற்றும் கழிவு மேலாண்மை வசதிகள் இருக்கின்றன.

மக்கள் வேலை வேண்டுமென்று கேட்கும்போது அது தரப்படுகிறது. அதற்கு விலையாக அவர்களின் வீட்டையே பிடுங்கி அதிலேயே அவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த வேலைக்கு எவ்வளவு சம்பளம் தருகிறார்கள், அதை எந்த ரூபத்தில் தருகிறார்கள்? ●

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## எனக்கு வாற கோபத்துக்கு

புளொட் சித்தார்த்தனுக்கும், ரெலோ செல்வம் அடைக்கல நாதனுக்கும் சூடு சுறணை இல்லை, கூச்சம் இல்லை எண்டு பக்கத்திலை நிண்டு கிள்ளிப் பாத்தமாதிரிச் சொல்லி இருக்கிறார் ஈ.பி. ஆர்.எல்.எவ் சுரேஸ். இப்ப அப்பிடிச் சொன்ன சுரேஸுக்குப் பதிலடி குடுக்க வேணும் எண்டு சித்தருக்கும், செல்வத்துக்கும் ஒர்மம் இருந்தால் சுமந்திரனுக்குச் சரியான பதிலடியைக் குடுக்கட்டும் பாப்பம்.

எட சுமந்திரன் தான் தான் தமிழரசுக் கட்சியின்ரை ஆள் எண்ட மாதிரியும் மாவை ஒரு டம்மிப் பீஸ் எண்ட மாதிரியும் சொல்லிக் கொண்டு திரியிறார். அதோடை மற்ற ஆரம் சொல்லுறதைவிடத் தன்ரை வாயாலை சொல்லுறதுதான் தமிழரசுக் கட்சியின்ரை கருத்து எண்டு சுமந்திரன் சொல்லேக்கை எப்பிடி சித்தரும், செல்வமும் சொல்லுவினம் அது சுமந்திரன்ரை சொந்தக் கருத்து அது கட்சியின்ரை கருத்தில்லை எண்டு.

அரசாங்கம் சுமந்திரனுக்குச் சம்திங் குடுத்திட்டுதெண்டமாதிரியும் சுரேஸ்க்கு ஐமிச்சம். அதாலைதான் சுமந்திரன் சும்மா சும்மா அரசாங்கத்துக்கு வக்காளத்து வேண்டிற மாதிரியும் கதைச்சுக் கொண்டு திரியிறாராம். இந்தக் குவண்ட் மெண்டிலை கனக்கக் காணியள் விட்டாச்சு. முல்லைத்தீவிலை சிங்களக் குடியேற்றம் நடக்கேல்லை. அங்கை சும்மா சிங்களச் சனம் சண்டை நடந்த இடம் எப்பிடி எண்டு பாத்திட்டுப் போகினமேயொழிய அவை அங்கை இருக்க வரேல்லை. அவை காணி பிடிச்சு இருக்க வந்ததெண்டுமு சிலபேர் சொல்லித்திரியினம். அது பச்சைப் பொய் எண்டும் சுமந்திரன் பேசிறாராம்.

சுமந்திரன் கண்டிக்குப் போய் ஒரு கதையும், காலியிலைபோய் ஒரு கதையும் அப்பிடியே கரவெட்டிக்கு வந்து ஒரு கதையும் கதைக்கிறார் எண்டும் சுரேஸுக்குக் கடுப்பு. சரி என்னத்தைச் சொன்னாலும் எல்லா இடத்திலையும் ஒண்டைச் சொல்லன்.எவ்வொரு இடத்தையும் ஒவ்வொரு மாதிரிச் சொல்லுறது அவ்வளவு நல்லதாயில்லை. பாக்க வலு டீசன்றான ஆளாத்தான் தெரியிறார். செய்யிறது முழுக்க உலுட்டாவாக் கிடக்கே எண்டு சனம் சொல்லுது.

சில வேளை சுரேஸ் சுமந்திரனுக்குத்தான் சூடு சுறணை இல்லை எண்டு திட்டிறதுக்குப் பதிலா சித்தரையும், செல்வத்தையும் சொன்னாரோ தெரியாது.

இடைக்கால அறிக்கை வந்த நேரம் படிச்ச சனம் முழுக்கச் சொல்லிப்போட்டுது இடைக்கால அறிக்கையிலை ஒண்டும் இல்லை. ஒற்றை ஆட்சியைப் பற்றித்தான் எழுதிக் கிடக்கு. சமஷ்டி இல்லை எண்டு. அப்ப சுமந்திரன் சொன்ன வராம், நீங்கள் இடைக்கால அறிக்கை வாசிக்கேக்கை கண்ணாடி போடேல்லைப் போலை. நான் வடிவாப் பாத்தனான் அதிலை சமஷ்டி பற்றிச் சொல்லி இருக்கு, தீர்வு வந்தாப் பிறகு பாப்பம். அப்ப சொல்லுவியள் "எட சுமந்திரன் அண்ணை சொன்னது தான் சரி. அவர் அப்ப சொல்லேக்கை நாங்கள் நம்பேல்லை. இப்ப அவருக்குச் சிலை வைக்கவேணும் எண்டு விளப்பமாச் சொல்லிக் கவலைப்படுவியள். இப்ப நான் செய்யிறதை உணராமல் பிறகு யோசிக்கேக்கை லேட்டாப் போம்." எண்டு சுமந்திரன் சொல்லுறாராம்.

எங்கும் எல்லாத்துக்கையும் தலை ஒட்டுறபடியாலைதான் சுமந்திரனுக்குக் கெட்டபேர். மற்றவை மாதிரி அவரும் இருந்திட்டால் நல்லதெல்லே எண்டு சனம் கேட்டவை. சனத்துக்கு என்ன விளங்கும் எண்டு நினைக்கிறியள்? மற்றவை மாதிரி இருந்தால் எஸ்.ரி.எவ் பாதுகாப்புக் கிடைக்குமோ? அடிக்கடி சுத்தலாமோ? அரசாங்கத்தின்ரை அனுசரணை கிட்டுமோ? லண்டன்காரற்றை சிநேகிதம் வருமோ?

இதுக்கை கஜேந்திர குமார் சுமந்திரனைத் திட்டுற திட்டு! சமஷ்டி தமிழ் சனத்துக்குத் தேவை இல்லை. பதின்மூண்டைக் கொஞ்சம் கூட்டித் தந்தால் காணும் எண்டு சுமந்திரன் சொன்னதாக் கஜேந்திரகுமார் சொல்லுறார். சுமந்திரன் சொல்லுறார் அப்பு ஆச்சியாணை நான் அப்பிடிச் சொல்லேல்லை. தமிழ் சனத்தின்ரை நாடித் துடிப்பு என்னெண்டு எனக்குத் தெரியும். நான் அப்பிடிச் சொல்லுவனோ? சமஷ்டி எண்ட போட்டைத்தான் வேண்டாம் எண்டு சொன்னனான்.

கஜேந்திரகுமார் இன்னும் தேன்நிலவு மூட்டிலை இருந்து திரும்பேல்லை. அதாலை நான் சொன்ன நன்மையான காரியங்கள் எல்லாம் அவருக்குத் தலைகீழாத் தெரியிது. உண்மையா தமிழ் சனத்திலை அக்கறை உள்ள ஒராளைப் பாத்துக் கேக்கிற கேள்வியே உது? எனக்கு வாற கோபத்துக்கு...!

**கோளரங்கன்**

---

# திமிறி எழுவதில்தான் தில்!

தாம்பூலம் தரித்தவாய்க்கு சாம்பார்
ருசிக்காது
சீனிமென்ற நாக்கிற்கோ தேனீர்
இனிக்காது
நம்வாழ்வும் இதுபோல்தான்...
இன்பங்கள் தொடர்ந்துவரின் இவ்வாழ்க்கை
இனிப்பதில்லை
துன்பங்கள் தொடர்ந்தாலும் துயர்தானே
வாழ்வென்பாய்
எதிரிகள்..., ஏமாற்றம்..., ஏக்கங்கள்...,
இவையெல்லாம்
எதிரிடையே வந்தால்தான் உலகம் வரமாகும்
அதிரும் நடுக்கங்கள்... அலைக்கழிக்கும்
பேரலைகள்
புதிராய் வருகையில்தான் புடம்போடப்
படுவாய்நீ
நம்பிக்கைத் துரோகத்தை நேரில்
அறிகையில்தான்
நல்லவரைத் தேர்ந்தனுகும் நுண்ணறிவுன்
வசமாகும்
பம்மாத்து..., பரிகாசம்..., பசப்பு...
இவையெல்லாம்
சும்மா இருப்பவரால் பிரித்தறிதல்
இயலாது
கம்மாலை உலைவாயில் காய்ச்சி
அடித்தாலே
நம்மளுக்கு கத்தியொன்று கையில்
கிடைக்கிறது!
காத்துள்ள பந்தொன்றை கடலில்
அமுக்கிப்பார்!
'தோத்துப்போய் விடேன்' என்று அதுதிமிறி
எழுந்துவரும்!
நீயும் இதைக்கொஞ்சம் நெஞ்சில்
கொள்வாயேல்...
பாயும் புலியாகிப் போய்சேரும்
இடஞ்செல்வாய்!
திமிறி எழுவதில்தான் தில்.



■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 42

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

மீண்டும் எறிகணைகள் போராளிகளின் நிலைகளை நோக்கி விழ ஆரம்பித்தன. போராளிகளை மேலும் சிறிது தூரம் பின்வாங்கி நிலையெடுக்கும்படி உத்தரவு வந்தது.

இங்கு பண்டிவிரிச்சான் களம் சாதகமான விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்க, முள்ளிக்குளம் பக்கம் ஒரு நெருக்கடியான சூழ்நிலை உருவாகியிருந்தது. வீரச்சாவுகள் அதிகரித்தது மட்டுமின்றி கீரிசுட்டான் நோக்கிப் பின்வாங்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுவிட்டது.

கீதா மிகவும் திறமையுள்ள தளபதி என்பதில் சந்தேகமில்லை. துணிச்சலுடனும் திட்டமிட்ட வகையிலும் போராளிகளை வழிநடத்துவதில் பல முறை தலைவரின் பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறாள். தீச்சுவாலை எதிர்ச்சமரின் போது அவள் ஆற்றிய சாதனைகள் அற்புதமானவை. ஒரு மையத்தை ஒரே நாளில் ஆறு முறை விட்டுப் பின்வாங்குவதும் மீட்பதுமாகச் சாதனை படைத்தவள். ஒரு சந்தர்ப்பத்தில் தனது தோட்டாக்கள் முடிந்துவிட்ட நிலையில் எதிரி மேல் பாய்ந்து அவனைக் கத்தியால் குத்தி அவனின் துப்பாக்கியையே எடுத்து அவனின் உடலைக் கவசமாகப் போட்டு மோதியவள்.



அச்சம் என்பது அவளுக்குக் கனவில்கூட வந்ததில்லை. ஆனால் அவளுக்கு காடுகள் பற்றிய அனுபவமோ, அறிவோ இல்லை. போராளிகளின் இழப்பு அதிரிக்கவே கட்டளைப்பீடத்திலிருந்து, கீரிசுட்டான் நோக்கி பின்வாங்கும்படி உத்தரவு வந்தது. கீதா படையினரை மேலும் ஓர் அங்குலம் கூட முன்னேற விடுவதில்லை என்ற முடிவுடன் கடும் எதிர்த் தாக்குதலைத் தொடுத்தாள்.

களமுனைத் தளபதி செல்வமே வியப்படையும் வகையில் பெண்கள் படையணியின் தாக்குதல் மூர்க்கமாக இருந்தது. அன்று ஏனோ கிபிர் கூட மூன்று முறை வந்து தாக்குதல்களை நடத்திய பின்பு அன்று பிற்பகல் வரவேயில்லை. முற்பகல் பத்து மணியளவில் சண்டை ஓய்ந்து விட்டது. கீதா வெறிபிடித்தவள் போலாகிவிட்டாள். நின்ற இடத்தை விட்டு பின் வாங்கும் நிலை ஏற்பட்டதுடன் 12 பெண் போராளிகள் வீரச்சாவடைந்தும் விட்டனர். அதிலும் அவளது பாதுகாப்பாளராக இருந்த செல்லக்குட்டி வீரச்சாவடைந்தது, அவளின் கோபத்தை மேலும் கிளறிவிட்டது. அவள் அவர்கள் அணியில் வயது குறைந்தவளாக இருந்ததுடன் எல்லோருக்கும் அவள் செல்லப் பெண்ணாகவேயிருந்தாள்.

அவள் கட்டளைப் பீடத்துடன் தொடர்பை ஏற்படுத்தினாள். “வணக்கமண்ணை! 12 பெண் போராளிகளும் 8 ஆண் போராளிகளும் வீரச்சாவண்ணை”

“தெரியும்”

“நாங்கள் எங்கடை நிலையளை விட்டு பின்வாங்கிட்டம்”

“தெரியும்”

“அவன் பிடிச்ச இடத்தைப் பலப்படுத்தப் போறான்”

“தெரியும்”

“உடனடியாய் இறங்கி அடிக்கவேணும்”

“தோற்கிறதுக்கும் போராளியளை பலி குடுக்கவும் ஒரு தாக்குதலை நடத்த ஏலாது”

“நாங்கள் இறங்கி அடிச்சு கலைப்பமண்ணை”

“சண்டை நீங்கள் நிக்கிற இடத்தில மட்டுமில்லை. 30 கிலோ மீற்றர் நீளத்துக்கு நடக்குது. நீங்கள் கட்டளையளை ஒழுங்கா நிறைவேற்றினால் போதும்”

தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது. தன் தோழிகளின் சாவுக்காக மட்டுமன்றி, சண்டையில் பின்வாங்கி விட்டமைக்காகவும் “ஓ”, என்று கதறி அழவேண்டும் போலிருந்தது. வெகு சிரமப்பட்டு அவள் அதை அடக்கிக் கொண்டாள்.

அவள் போய் போராளிகளின் வித்துடல்களைப் பார்வையிட்டு ஒவ்வொன்றாக வருடிவிட்டாள். மாலா கடந்த வாரம்தான் ஒரு போராளியைக் காதலிப்பதாக கீதாவுக்குத் தெரிவித்து அனுமதி பெற்றிருந்தாள். அவளும் கூட காதலை மறந்து கண்மூடி நீண்ட துயிலில் ஆழ்ந்துவிட்டாள். ஒரு பெரு மூச்சுடன் போய் செல்லக்குட்டியின் கன்னத்தை தடவினாள். அவளின் கண்கள் அவளையறியாமலேயே கலங்கின. மெல்ல குனிந்து செல்லக் குட்டியின் கன்னத்தில் முத்தமிட்டாள். வித்துடல்களைக் கொண்டு செல்ல அரசியல் துறையினர் வாகனம் வரவே, உடல்களை அவர்களிடம் ஒப்படைத்தாள்.

● ● ●

அன்று அதிகாலையிலேயே பள்ளமடுவில் கூடியிருந்தவர்கள் இலுப்பைக்கடவை நோக்கிப் புறப்பட ஆரம்பித்தனர். ஐந்து மணிக்கே விடத்தல்தீவின் பங்குத் தந்தை எல்லோருக்கும் பாண் கொண்டுவந்து விநியோகம் செய்தார். அதையும் வாங்கிக் கொண்டு மக்கள் தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

பார்வதி சுந்தரத்திடம், “தம்பி, போய் எங்களுக்கும் பாணிலை ஒரு றாத்தல் வேண்டிவாவன், பழஞ்சோத்தோடை கலந்து சாப்பிடலாம்”, என்றாள்.

“அம்மா, ஒண்டும் கொண்டு வராத சனம் வடிவாய் வாங்கிச் சாப்பிடட்டும். நாங்கள் பழஞ்சோத்தக் கரைச்சுக் குடிப்பம்” எனக்கூறி சுந்தரம் மறுத்துவிட்டான். பார்வதிக்கும் அவன் சொல்வது நியாயமாகவே பட்டது. அதற்கிடையில் முத்தம்மா போய் வரிசையில் நின்று ஒரு றாத்தல் பாண் வாங்கி வந்து பார்வதியிடம் கொடுத்தாள். அதை முருகேசருக்கும் பெருமாளுக்கும் கொடுக்கலாம் என்ற எண்ணத்துடன் பார்வதி அதை வாங்கி பத்திரப்படுத்திக் கொண்டாள்.

அந்த வெட்ட வெளியில் காலைக்கடன் கழிப்பது சாத்தியமானதாக இருக்கவில்லை. மூன்று பெண்களும் சற்றுத் தொலைவில் உட்பக்கமாக போய் விஷயத்தை முடித்துவிட்டனர். ஆண்கள் பாடு விடிந்துவிட்டதால் திண்டாட்டமாகி விட்டது. போகும் வழியில் எங்காவது இயற்கைத் தேவையை நிறைவு செய்யலாம் என எண்ணிக் கொண்டனர்.

பொருட்களையும், முருகேசர், பெருமாள் ஆகியோரையும் வண்டிலில் ஏற்றிவிட்டு மாடுகளைப் பூட்டினார் பரமசிவம். முத்தம்மா தமக்குரிய சமையல் பாத்திரங்களும் பருப்பு, சீனி, தேயிலை, அரிசி, கருவாடு போன்ற பொருட்களும் ஏற்றப்பட்டு விட்டனவா எனச் சரி பார்த்துக் கொண்டாள். பரமசிவம் மாடுகளை நுகத்தில் பூட்டி பயணத்தை ஆரம்பித்தார். ஏனையவர்கள் பின்னால் நடக்கத் தொடங்கினர்.

அவர்கள் வந்து வீதிக்கு ஏறியபோது இரவு தன்னிடம் சோறு வாங்கிச் சாப்பிட்ட கிழவி, அந்தப் பூவரச மரத்தின் கீழ் படுத்திருப்பதைச் சுந்தரம் கண்டுவிட்டான். அவளருகில் பிய்ந்து கிடந்த சோற்றுப் பார்சலை நாய் ஒன்று தின்று கொண்டிருந்தது.

கிழவியையும் தங்கள் வண்டியில் ஏற்றிச் செல்லும் நோக்கத்துடன் அவளருகில் சென்று உடலைத் தொட்டு உலுப்பினான், உடல் சில்லிட்டுப் போயிருந்தது.

அவன் மெல்ல, “கிழவி செத்துப் போச்சுது!”, என்றான்.

“பாவம், இப்ப என்ன செய்யிறது?” என முத்தம்மா கேட்டாள்.

சுந்தரம் ஒரு பெருமூச்சுடன், ‘கிழவின்ரை சொந்தக்காறர் எப்பிடியும் தேடுவினைதானே, அப்பிடியில்லாட்டி பங்குத் தந்தை ஏதாவது ஏற்பாடு செய்வார்”, என்றான்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

# அம்ரிதா ப்ரீதம் சிறுகதைகள்

**சடகோபன்**



அம்ரிதா ப்ரீதம் எழுதிய சிறுகதை தொகுப்பு ஒன்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு வாசித்தேன். ஒவ்வொரு கதையும் ஒவ்வொருவரால் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. குஷ்வந்த் சிங் Stench of Kerosene என்ற கதையை மொழியாக்கம் செய்திருக்கிறார். இக்கதையில் குழந்தை பெற இயலாத பெண்ணை துறந்து வேறு பெண்ணை திருமணம் செய்வதால் பிறக்கும் குழந்தையைத் தொடும்போது அவனுக்கு மண்ணெண்ணெய் வாசனை அடிப்பதால் குழந்தையை எடுத்துச் சென்றுவிடுமாறு இரண்டாவது மனைவியிடம் பதறுகிறான்.

Aerial கதையில் ஒருவனைக் காதலித்து வீட்டைத் துறந்து திருமணம் செய்து கொள்ளும் பெண் அவன் வேறொரு பெண்ணுடான உறவை பற்றிச் சொல்லும் போது அவனிடமிருந்து விலகுகிறாள். அவள் அவனிடம் மண்டியிட்டுக் கதற வேண்டும் என்று அவன் விரும்புகிறான். வீட்டைத் துறந்து தன்னிடம் வந்து பலவீனமாக நின்ற பெண்ணை தான் காதலித்ததாகச் சொல்கிறான். அவள் இனி அப்படி செய்ய இயலாது என்கிறாள். அவளால் அவனை அதன் பின் காதலிக்க முடியவில்லை. இந்தக் கதை ஒரு வாசகரிடம் நேரடியாக பேசுவது போல Second person இல் எழுதப்பட்டுள்ளது. நல்ல உத்தி.


Reflections என்ற கதை சோபா சிங் என்ற ஓவியர் உடைந்திருக்கும் கண்ணாடிச் சில்லுகளில் தன் பிரதிபலிப்பைப் பார்த்து சிந்திக்கும் பல்வேறு விஷயங்கள் பற்றிய கதை. அவர் வாழ்வில் வந்த பெண்கள், அவரின் தந்தை பற்றி யோசிக்கிறார். இந்தக் கதையில் ஒரு நல்ல வரி வருகிறது. ஒருவன் தன் சுயத்தில் தன் தந்தையை பார்க்கிறான். (A Man sees his father in his own self) என்ற வரி பிரமாதமான வரி. பெண்கள் வளர்ந்து அவர்களின் அன்னைகளாகவும் ஆண்கள் வளர்ந்து அவர்களின் தந்தைகளாகவும் ஆகிறார்கள் இல்லையா? கண்ணாடியில் பார்க்கும் போது தன் தந்தையைப் பார்க்காத மகன் இருக்க முடியுமா? தான் வெறுத்த தன் தந்தையின் பலவீனங்களை, தடுமாற்றங்களை தன்னில் பார்க்கும் மகனின் நிலை எப்போதும் இலக்கியத்திற்குரியது.

A Letter from Guliyana என்ற கதையில் பூமியில் சுதந்திரமாக வேர் விட்டு வளரும் மரம் போல ஒரு பெண்ணிற்கான சுதந்திரம் இருக்க வேண்டும் என்கிறார். அது மண்தொட்டியில் வளரும் செடி போன்று இருக்கக்கூடாது. அதற்கு அவள் பயமின்றி சுற்றித்திரியும் சுதந்திரம் வேண்டும், அதற்கான சூழல் வேண்டும் என்கிறார்.

The Third woman என்ற கதை போரில் கணவன் இறந்த பின் தன் பிறந்த வீடு வரும் மீனா என்ற பெண்ணைப் பற்றியது. இப்போது வளர்ந்து நிற்கும் அவளது சகோதரியின் மகன் அவளை மீனு என்று அழைக்கிறான். அவளில் ஒரே நேரத்தில் தன் கணவன் தன்னை மீனு என்று அழைத்ததும் தன் கருவில் உருவாகாமலே போன குழந்தையும் இணைந்து அவளைக் குழப்புகிறது. 'கணவன் இறந்து போகும் போது ஒரு பெண் இறக்காமல் போகலாம், ஆனால் அவளது கருப்பை இறந்து போகிறது' என்ற வரி வருகிறது. அந்த உறவுக்குப் பின் அவள் இறந்து பிறக்கிறாள். மிகவும் சிக்கலான கதை.

Mr.Know it all, ஒரு கட்டட ஒப்பந்தகாரர் பெண்களை எப்படி நடத்த வேண்டும் என்று மேஸ்திரியிடம் அறிவுறுத்துகிறார். கதையின் இறுதியில் அந்த ஒப்பந்தகாரரின் மனைவி காணாமல் போய்விடுகிறார். அப்போது அந்த கட்டடத்தில் வேலை செய்யும் பெண் மேஸ்திரியிடம் ஒப்பந்தகாரர் தனக்கு அனைத்தும் தெரியும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். உண்மையில் அவருக்கு ஒன்றுமே தெரியாது என்கிறாள்.

இந்தத் தொகுப்பில் உள்ள கதைகள் பெண்ணின் காதல், அவர்களின் அக விடுதலை, அவசியப்படும் சுதந்திரம், அதற்குத் தடையாக இருக்கும் சூழலின் அச்சுறுத்தல், பெண்ணைப் பற்றி ஏதுமறியாத ஆண் ஆகியவற்றைக் குறித்து கூர்மையாகப் பேசுகிறது. நல்ல தொகுப்பு.




எனது சம்பவங்களை
மறைத்து வைக்கும் அல்லது
பாதுகாக்கும் கறுப்புப் பெட்டி
திரும்பித் திரும்பி வரும்
ஞாபகங்கள்தான்.
அது கவிதையாகவோ
உரையாடலாகவோ
வளர்கிறது.
அப்படி இல்லையெனில்
புதிய காட்சிகளை
யார் யாரோ துவங்கி
வைக்கிறார்கள்
அது ஏதாவது ஒரு தாளில்
கிறுக்கப்படுகிறது
அப்படி கிறுக்கப்படும் போது
சந்தோசங்களைவிட வலியின்
பக்கங்கள்
மிகைத்துவிடுகிறது.
மெய் தழுவிய வார்த்தைகளை
முந்திக் கொண்டு
சூன்யங்களில்
சிக்கிவிடுகின்றன
மேசையில் பரப்பிக்கிடக்கும்
அந்த ஞாபகங்கள்.
எனினும் சூன்யத்திற்கும்
எனக்குமாய் பெருத்த
இடைவெளி இருப்பதால்
ஞாபகங்கள் காற்றில் மிதந்து
கொண்டே இருக்கின்றன.

**- ஏ.நஸ்புள்ளாஹ்**

(தொழில்நுட்பத் தவறு காரணமாக கடந்த வாரம் வெளியாகிய இக்கவிதை பிழையாக அச்சாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.)

# கதைவெளிச் சொற்கள் - 01

**சி.விமலன்**




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

**இந்த வாரத்தில் இருந்து ஆரம்பமாகும் 'கதைவெளிச் சொற்கள்' என்ற இந்தப் புதிய தொடரில் ஈழத்துப் புனைகதைகளில் பயன்படுத்தப்பட்டு வரும் பேச்சு வழக்குச் சொற்களை ஆவணப்படுத்தும் விதமாக எழுத்தாளர்களும், வாசகர்களும் அவ்வப்போது எழுதவுள்ளார்கள்.**

மொழியியல் ஆய்வுகள் வலுப்பெற்றுள்ள இன்றைய காலகட்டத்தில் பேச்சு மொழியின் முக்கியத்துவம் பலராலும் உணரப்பட்டுள்ளது. பெரும்பாலும் புனைகதைகளைப் பொறுத்தவரையில் இருவழக்குகள் கையாளப்பட்டு வருகின்றன. கதாசிரியரின் கூற்றுக்கள், விவரணங்கள் என்பன இலக்கியத் தமிழிலும் பாத்திர உரையாடல்கள் மட்டும் பேச்சு வழக்கிலும் அமைந்து காணப்படும். ஒரு குறிப்பிட்ட பிரதேச மக்களது வாழ்க்கை முறைகளையும் சடங்குகள், சம்பிரதாயங்கள் போன்றவற்றையும் சிறப்பாகச் சித்திரிப்பதற்குப் பேச்சு வழக்குகள் உதவுகின்றன. ஈழத்தில் தத்தமது சமூகங்களைப் பிரதிபலிக்கும் விதமான படைப்புக்கள் தோன்றிய பொழுதே அவற்றில் இயல்பாகப் பேச்சுவழக்கும் இடம்பெறலாயிற்று.

ஈழத்தில் 1960 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற மரபுப் போராட்டமானது தொன்று தொட்டு வந்த மரபுகளை மீறுவதா? இல்லையா? என்பது குறித்த வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக



இலக்கியங்களில் இழிசனர் வழக்கைப் பயன்படுத்த வேண்டுமா? செந்தமிழைப் பயன்படுத்த வேண்டுமா? என்ற அடிப்படையில் அது நடைபெற்றது. இந்தப் போராட்டத்தின் இறுதியில் மரபு மீறப்பட வேண்டும் என்ற அணிக்குக் கிடைத்த வெற்றி புனைகதைகளில் ஈழத்துப்பேச்சு வழக்குகள் தொடர்ந்து இடம்பெறுவதற்கான வாய்ப்பை வழங்கி ஈழத்துப் படைப்புக்களின் தனித்துவத்திற்கும் காரணமாக அமைந்தது.


அறுபதுகளுக்கு முன்னதாகவே ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளும் மறுமலர்ச்சி எழுத்தாளர்களும் ஈழத்துப்புனை கதைகளில் பேச்சு வழக்குச் சொற்களைப் பயன்படுத்தி இருந்தாலும் பிரக்ஞைபூர்வமாக அதனைப் படைப்புகளில் கையாள வேண்டும் என்றதொரு

(18ஆம் பக்கம் பார்க்க)

# பின்பற்றக் கூடாத முன்னுதாரணம்

இதுவரை எதை எதையெல்லாம் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும். யார் யாரைப் பார்த்துப் பழக வேண்டும் என்று பலவிதமான கட்டுரைகளை எழுதி வந்த நாம் எதைப் பார்த்துச் செய்யக் கூடாது என்ற விடயத்தையும் எழுதுவது பொருத்தமானதென்று எண்ணுகிறேன்.

இப்படியான விடயத்தை முதன்முதலாக எழுத வேண்டும் என்று சமூகப் பொறுப்பென்ற விடயமே எம்மைத் தூண்டுகிறது. எதை மக்கள் முன்னுதாரணமாகக் கொள்ளக்கூடாது என்பதே இக்கட்டுரையின் பொருள். ஏனெனில் பொதுவாகத் தமிழர்களிடையே



- அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத்து மக்களிடையே காணப்படும் ஒரு அருவறுப்பான விடயம் பிறரைக் “கொப்பி” அடிப்பது. அதாவது மற்றவர்களிடம் உள்ள நல்ல விடயத்தை விட்டுவிட்டுக் கூடாத விடயத்தை எவ்வித சிந்தனையுமின்றிக் கண்மூடிக் கற்றுக் கொள்வது.

எமது வரலாற்றை எடுத்துக் கொள்ளுங்கள். அது அரசியலானாலும் சரி, பொருளாதார முயற்சியானாலும் சரி, கலை கலாசார பண்பாட்டு விடயங்களானாலும் சரி, போராட்ட இயங்கங்களானாலும் சரி எல்லாம் ஒருவரைப் பார்த்து ஒருவர் “கொப்பி” அடித்திருந்ததை - இன்னும் அடித்துக் கொண்டிருப்பதை அறிந்து கொள்வீர்கள்.

அண்மையிலே பத்திரிகைகளிலும், இணையங்களிலும் பகிரப்பட்ட விடயம் “நல்லூர் முருகன் கோவிலுக்குத் தங்கக் கூரை போட்டிருக்கிறார்கள்” என்பது. அதுவும் ஒன்றல்ல இரண்டல்ல பல கிலோ எடையில் அந்தக் கூரை வேயப்பட்டிருக்கிறது. கூரை வேயப்பட்டது மட்டுமல்ல 365 நாட்களும் அது பாதுகாப்பாக இருக்கிறதா என்று கண்காணிக்க வேண்டும்.

இந்தச் செய்தியைக் கண்டதும் எனக்கு ஒரு பழைய விடயம் ஞாபகத்துக்கு வந்தது. அதாவது தற்போது இந்துக் கோவில்களின் அடையாளமாகக் கருதுகின்ற கோயில் சுற்றுப் பிரகாரத்துச் சுவருக்கு வெள்ளை சிவப்புக் காவி வரிகள் அடிப்பதென்ற விடயம் நல்லூர் முருகன் கோவிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது. முதன் முதலில் அப்படி அடித்தவர்கள் நல்லூர் ஆலய தர்மகர்த்தா என்பது எல்லோருக்கும் தெரியும். தற்போது அது எல்லா இடங்களுக்கும் பரவி அந்த நிறம் ஒரு அடையாளமாக வந்துவிட்டது. அது தப்பில்லை. ஒரு சீராக இருப்பது நல்லது. பெருமைமிக்க விடயம்.

ஆனால் நல்லூர்க் கோவில் சொந்தக்காரர்கள் அந்தத் தங்கக் கூரை விளையாட்டைச் செய்வதற்கு முன் கொஞ்சம் யோசித்திருக்கலாம். இது நல்லூர் முருகன் கோவிலோடு முடியப்போவதில்லை. வெளி நாட்டில் உள்ள ஜம்பவான்கள் உடனடியாகக் களத்தில் குதித்துத் தங்கள் தங்கள் ஊரில் உள்ள கோயில்களுக்குத் தங்கக் கூரைக்கான ஆயத்தங்களைச் செய்ய முனைவார்கள். அவர்கள்தான் அது பற்றிச் சிந்திக்காவிட்டாலும் ஊரில் உள்ள வால்பிடிகளும், தர்மகர்த்தாக்களும், கோயில் பிராமணர்களும் அவர்களுக்கு “ஐடியா” கொடுப்பார்கள்.

ஆனால் போரால் அழிந்த எத்தனையோ கோயில்கள் கூரையற்றுக் கிடக்கின்றன என்பது நல்லூர் மணியகாரனுக்குத் தெரியுமா? என்பது நல்லூர் முருகனுக்குத்தான் வெளிச்சம். சமூக அக்கறையும், சமூகப் பொறுப்புமுள்ள ஒரு மனிதன் இப்படியான பணிகளில் ஈடுபடமாட்டான். பொதுப் பணியில் - சமூகத்தின் உயர்ந்த இடத்தில் இருக்கும் ஒருவர் சமூகத்தைப் பற்றிச் சிந்தித்த பின்னேதான் தன்னைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அவரைப் பார்த்து பிறர் கஷ்டப்பட்டுவிடக் கூடாது என்று எண்ணி ஒழுக்கத்துடன் நடக்க உத்தேசிக்க வேண்டும்.


ஆன்மிகத்துக்குத் திறவு கோலாகக் கணிக்கப்படுவது ஒழுக்கமே. நாயன்மார்கள் ஒழுக்க சீலராக இருந்ததாகத்தான் கற்றிருக்கிறோம். அதனால்தான் அவர்கள் இறைவனைக் கண்டிருக்கிறார்கள். மிகவும் ஒழுக்கத்துக்கே உரித்தான ஆலயங்களே ஒழுக்கக்கேடான விடயங்களை முன்னிறுத்துபவைகளாகக் காணப்படுகின்றன. ஆலயங்கள் இப்போ “ஆ” அற்று வெறும் லயங்களாகத்தான் இருப்பதாகத் தெரிகிறது. நீங்கள் சமூகப் பொறுப்புள்ளவராக? இருந்தால் தயவு செய்து இந்தத் தங்கக் கூரை விடயத்தை முன்னுதாரணமாகக் கொண்டு விடாதீர்கள்...!



'அடங்கமறு' படத்தில் ஜெயம் ரவிக்கு ஜோடியாக நடிக்கிறார் காஜல் அகர்வால்.

முன்னர் போகன் படத்தில் காஜலை அணுகியபோதும் நேரமின்மையால் அவர் நடிக்கவில்லை.







குடும்பப் பிரச்சினைகளில் இருந்து மீண்டு வந்திருக்கும் அஞ்சலி வசம் தற்போது 5 படங்கள் உள்ளன.

திடீரென அமெரிக்கா பறந்தார். அங்கு தனது கவர்ச்சியை மெருகேற்றும் விதத்திலான சிகிச்சைகளை பெற்றுள்ளார்.

இதை வெளிப்படுத்தும் விதத்தில் தனது கவர்ச்சிப் படங்களை வலைதளங்களில் தெறிக்க விட்டுள்ளார் அஞ்சலி.




# பெயர் மாற்றம்

உதைபந்தாட்ட உலகில் கழகங்களுக்கு விளம்பர அனுசரணை செய்யும் நிறுவனங்கள் குறிப்பிட்ட அந்தக் கழகங்களின் மைதானங்களுக்கு இருக்கும் பெயர்களை மாற்றி தமது பெயர்களை வைப்பது ஒன்றும் புதிதில்லை. ஆனாலும் ஆர்ஜென்ரீனாவில் ஒரு மைதானத்திற்கு பெயர்மாற்ற எடுத்த முடிவு சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. ஆர்ஜென்ரீனா அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான மரடோனா ஆர்ஜென்ரீனாவில் உள்ள ஆர்ஜென்ரீனோஸ் ஜுனியர்ஸ் கழகத்துக்காகவே தனது முதல் தொழில்சார் போட்டியை 1976ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20 ஆம் திகதி விளையாடி இருந்தார்.


பிற்படத் தனது திறமையால் முன்னேறிய மரடோனா உதைபந்தாட்ட உலகில் பீலேக்கு நிகரான ஜாம்பவானாக இன்றுவரை கொண்டாடப்பட்டு வருகின்றார். அவரைக் கௌரவிக்கும் முகமாகப் பல வருடங்களுக்கு முன்னரே மேற்படி கழகம் தனது மைதானத்திற்கு 'டியாகோ அர்மாண்டோ மரடோனா' எனப் பெயர் சூட்டி இருந்தது.

இந்நிலையில் கடந்தவாரம் ஆர்ஜென்ரீனோஸ் ஜுனியர்ஸ் கழகம் தமது கழகத்திற்கு நிதியுதவி மற்றும் அனுசரணை செய்யும் நிறுவனமான 'ஓட்டோகிறெடிற்றோ' பெயரையும் சேர்த்து இனி 'ஓட்டோகிறெடிற்றோ டியோகோ அர்மாண்டோ மரடோனா' மைதானமென அழைக்கப்படும் என்று அறிவித்துள்ளது. இது இரசிகர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மைதானத்திற்கு தமது நட்சத்திர வீரரின் பெயர் மட்டுமே இருக்க வேண்டும் எனவும் அனுசரணை வழங்கும் நிறுவனத்தின் பெயரோடு சேர்ந்திருந்தால் அது அவரின் பெயருக்குக் களங்கம் எனவும் கூறியுள்ளனர்.

இது குறித்து மரடோனா எந்தவிதமான கருத்தையும் இதுவரை கூறவில்லை. ஆனாலும் கழகத்தின் தலைவரான கிறிஸ்ரியன் மலாஸ்பினா தான் இது குறித்து மரடோனாவுடன் உரையாடியதாகவும் அவர் அதற்கு மறுப்பெதுவும் தெரிவிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# மீள் திறப்பு




அமெரிக்க ஓபன் தொடரில் 1978 ஆம் ஆண்டு முதல் போட்டிகள் நடைபெற்று வந்த லூயிஸ் ஆம்ஸ்ரோங் அரங்கம் புனரமைக்கப்பட்டு அதே பெயரில் தற்போது மீளத்திறக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ஆட்டத்தின் பொழுது போட்டிகள் மழையால் பாதிக்கப்படுவதனால் புதிதாக அமைக்கப்பட்ட இந்த அரங்கத்தின் கூரை காலநிலைக்கேற்ப உள்ளிழுக்கும் மற்றும் வெளித்தள்ளும் தன்மை கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த அரங்கம் 14000 இருக்கைகளை உள்ளடக்கக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது பெரிய அரங்கமாகவும் உலகளாவிய ரீதியில் 13 ஆவது பெரிய அரங்கமாகவும் காணப்படுகின்றது. அதேசமயம் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் முதன்முறையாக Electric Line Calling தொழில்நுட்பம் பயன்படுத்திய தொடர் என்ற பெருமையையும் இம்முறை அமெரிக்க ஓபன் தொடர் பெற்றுள்ளது.

# ராஜினாமா

அவுஸ்ரேலிய முன்னாள் நடுவரான சைமன் ரபெல் 2000ஆம் ஆண்டு தனது 29 ஆவது வயதில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் நடுவராக அறிமுகமாகி 74 டெஸ்ட் போட்டிகளிலும் 174 சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் 34 சர்வதேச இருபதுக்கிருபது போட்டிகளிலும் கடமை புரிந்தவர். சிறந்த நடுவருக்கான ஐ.சி.சி விருதை 2004 - 2008 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாகப் பெற்றவர். தற்போது 47 வயதான சைமன் ரபெல் 2012 ஆம் ஆண்டு சர்வதேச நடுவர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றாலும் அதன்பின்னர் சில வருடங்கள் ஐ.சி.சி நடத்துகின்ற நடுவர்களின் செயல்திறன் மற்றும் பயிற்சி மேலாளராகச் செயற்பட்டு வந்தவர்.



பின்னர் 2016 ஆம் ஆண்டு முதல் அவுஸ்ரேலியாவில் நடைபெறும் உள்ளூர் போட்டிகளிலும் பிக்பாஸ் தொடரிலும் பங்குபற்றும் போட்டி நடுவர்கள் மற்றும் நடுவர்களைத் தெரிவு செய்யும் குழாமின் மேலாளராக கிரிக்கெட் அவுஸ்ரேலியாவில் பதவி வகித்து வந்தார். ஆனாலும் சமீபகாலமாக கிரிக்கெட் அவுஸ்ரேலியாவின் நடவடிக்கைகளில் அதிருப்தி அடைந்த அவர் புதிய பருவ காலப் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக கடந்தவாரம் தான் வகித்த பதவியை தனிப்பட்ட காரணங்களுக்காக ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

# வெற்றிக்குப் பின்னால்

நடைபெற்று முடிந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஹெப்டத்லான் போட்டியில் இந்திய வீராங்கனையான 21 வயது ஸ்வப்னா பர்மன் முதன்முறையாகத் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார். மேற்கு வங்கத்திலுள்ள ஜல்பைகுரி என்ற இடத்தைச் சேர்ந்த இவரது குடும்பம் மிகவும் ஏழ்மையானது. தந்தை ஒரு ரிக்ஷா ஓட்டுநர். சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பக்கவாதத்தால் தற்போதும் படுத்த படுக்கையாகவே இருக்கின்றார். தாயார் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்து வருகின்றார்.

திறமை இருந்தும் பயிற்சிகளை மேம்படுத்த வசதியில்லாது தவித்த ஸ்வப்னாவை இனங்கண்ட இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான ராகுல் டிராவிட் கிராமப் புறங்களில் உள்ள வசதி குறைந்த விளையாட்டு வீரர்களுக்கு உதவிவரும் கோ ஸ்போர்ட்ஸ் மற்றும் ராகுல் டிராவிட் அத்லெட் மென்ரர்ஷிப் திட்டத்தின் கீழ் அவருக்கு அனுசரணை வழங்கியுள்ளார். அத்தோடு ஸ்வப்னா கடுமையான முதுகு வலியால் அவதிப்பட்டு வந்ததனால் சச்சின் டெண்டுல்கருக்கு முதுகு வலி ஏற்பட்ட போது சிகிச்சை அளித்த வைத்தியரிடம் இவர் சிகிச்சை பெறுவதற்கும் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்.

அதேசமயம் ஸ்வப்னாவுக்கு இரண்டு கால்களிலும் ஆறாறு விரல்கள் இருப்பதனால் இவர் வழமையாகத் தயாரிக்கப்பட்ட சப்பாத்துக்களை அணிவதில் கூட வலியை அனுபவித்துள்ளார். இதனால் சென்னையை தளமாகக் கொண்ட சப்பாத்து தயாரிக்கும் ஐ.சி.எவ். நிறுவனம், நைக் நிறுவனத்துடன் தொடர்புகொண்டு இவருக்கெனப் பிரத்தியோகமான சப்பாத்துக்களைத் தயாரித்துக் கொடுத்திருந்தது. ஆனாலும் ஹெப்டத்லான் போட்டி என்பது 100 மீற்றர் தடை ஓட்டம், உயரம் பாய்தல், குண்டெறிதல், 200





மீற்றர் ஓட்டம், நீளம் பாய்தல், ஈட்டி எறிதல், 800 மீற்றர் ஓட்டம் ஆகிய 7 போட்டிகளை உள்ளடக்கியதாகும். இந்த 7 போட்டிகளிலும் பங்குபற்றுவதற்கு போட்டியாளர் 5 விதமான சப்பாத்துக்களை பயன்படுத்தல் வேண்டும். அந்தவகையில் ஐ.சி. எவ் நிறுவனம் இந்த ஐந்து விதமான சப்பாத்துக்களையும் ஒரு செற்றாக ஸ்வப்னாவுக்கு வழங்கியுள்ளது.

போட்டியன்றுகூட கடுமையான பல் வலியுடன் வீங்கிய தாடையுடனேயே களமிறங்கி தனது நம்பிக்கையாலும் விடா முயற்சியாலும் வெற்றி பெற்றுள்ளார் ஸ்வப்னா. அந்த வகையில் விளையாட்டுலகிற்கு மாத்திரமல்லாமல் சமூகத்திற்கும் ஒரு முன்மாதிரியாக ஸ்வப்னாவும் அவரின் சாதனைக்கு உறுதுணை புரிந்த ஐ.சி.எவ். நிறுவனமும் ராகுல் டிராவிட்டும் திகழ்கிறார்கள் என்றால் அது மிகையில்லை.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 08.09.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.